க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1925ஞு ஜூன்மீ | இதழ் 10.

தெய்வ வழிபாடு.

"பொற்பு றுங்கருத் தேபக மாயதிற் பொருந்தக்
கற்பின் மங்கைய ரெனவிழி கதவுபோற் கவினச்
சொற்ப னத்தினுஞ் சோர்வின்றி யிருந்தநான் சோர்ந்து
நிற்ப தற்கிந்த வினைவந்த வாறென்கொ னிமலா."

நாடார் மஹாஜன சங்கம்.

பத்தாவது கான்பரன்ஸ், மதுரை.

1925-ஞு, ஜூன்மீ 8, 9, 10உ.

வரவேற்புக் கமிட்டித் தலைவர்,

ஸ்ரீமான், சிவ. பெ. நா. சி. தங்கமணி நாடார்

அவர்கள் உபசாரப்பத்திரம்.

கடவுள் வணக்கம்.

நன்மையே யடைதல் நமது கோரிக்கை. சர்வஜீவ தயாபரனும் எங்கும் நிறைவெய்திசர்வ சாட்சியாயிருக்கின்ற கருணாகரக் கடவுளே! எங்கள் ஜாதியின் முன்னேற்றத்திற்காகவும் சன்மார்க்கங்களுக்காகவும் வேண்டிய விஷயங்களைப் பேசித்தெரிந்து அவைகளை நடைப்பிடிக்க வேண்டுமென்ற ஆவலா[illegible]ருத்துடன் எங்கள் சமூகத்தார் இவ்விடத்தில் கூடியிருக்கின்றனர். இவ்விதம் கூடும்படி செய்ததும் நினதருளே! அஃதேபோல் இவண் கூடிய நோக்கங்களும் இனிது நிறைவேறி நடைபெற்று எங்கள் சங்கமும் சமூகமும் நன்மையடையக் கருணைபுரியும்படி மனசுத்தியுடன் தாழ்மையாய் பிரார்த்திக்கிறேன்.

நகரச்சிறப்பும். உபசாரமும்.

கனம்பொருந்தியநாடார்குலப்பிரதிநிதிகளே!

அறிவின் தேசமாகிய பாண்டிய நாட்டிற்கு பிரதான பட்டணமாகவுள்ளதும், ஆதிபாஷையாகிய தமிழை வளர்த்த சங்கப்புலவர்கள் வீற்றிருந்ததும், அனேக புராதனச் சின்னங்களும் கட்டடங்களும் பொருந்தியதும், மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களின் தலைமை அதிபதிகளும் நியாய அதிபதிகளும் நவீன மில்களும் தொழில்களும் பள்ளிக்கூடங்களும் நாடார்களுக்கு சொந்தமானபேட்டைகளும் கட்டடங்களும் இன்னும் பலவித சிருஞ் சிறப்பு முள்ளதும், 1895-ம் வருஷத்தில் க்ஷத்திரிய மகாஜன சங்கம் கூடியதும், அப்பால் நமது மூன்றாவது நான்காவது ஒன்பதாவது கான்பரன்ஸ்கள்கூடியதுமான இம் மதுரையம்பதியில் இப்போது கூடியிருக்கிற பத்தாவது கான்பரன்ஸுக்கு தங்களுடைய சொந்த அலுவல்களையும் சிரமத்தையும் பாராட்டாமல் பொது நன்மையைப் பிரதானமாகக்கோரி இவ்விடம் விஜயஞ்செய்திருக்கும் உங்களுக்கு உபசரணைச்சபையின் பிரதிநிதியாக நான் என்னுடைய மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்தி வணக்கத்துடன் வரவேற்கிறேன்.

சபை வணக்கம்.

அறிவிற் சிறந்த சகோதரர்களே!

இந்நகரில் நம் ஜாதியினரில் என்னைவிட மேதாவிகளும் பிரபலஸ்தர்களும் இருந்தும் என்னை நமதுசங்கத்தின் கவுன்ஸில் உபசரணை கமிட்டியின் அக்கிராசனராக தெரிந்தெடுத்ததற்கு கவுன்ஸில் மெம்பர்களின் அன்பே காரணமென்று அறிகிறேன். அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் இதற்குமுன் இத்தகைய பெருஞ்சபைகளில் பேசியவனுமல்லேன். பொறுப்பான ஸ்தானத்தை வகித்தவனுமல்லேன், சொல்லாற்றலுடையவனுமல்லேன். குலாபிமானத் தூண்டுதலால் ஏற்பட்ட ஆவலின்பேரில் நான் சொல்லும் வார்த்தைகளிலேனும் அவைகளின் தாத்பரியங்களிலேனும் குறைகளிருப்பினும் மன்னித்து விஷயங்களை கிரஹித்துக் கொள்ளுமாறு பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

இராஜபக்தி.

நேயர்களே!

காலமாறுபாட்டால் நமது மேன்மையையிழந்து தென் ஜில்லாக்களில் இதரஜாதி சகோதரர்களால் கொடுமை இழைக்கப்பட்டு அவதியடைந்து அலங்கோலப்பட்டிருந்த நமக்கு மானிட சுதந்திரம் கொடுத்தவர்களும் கிடைக்கச் செய்தவர்களும் நிலைநாட்டியவர்களும் நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரே. நமது காருண்ய கவர்ன்மெண்டாருக்கு நாம் எப்போதும் ராஜபக்தி யுடையவர்களாக விருக்கக் கடமைப்பட் டிருக்கிறோம். இருந்தும் வருகிறோம், இருக்கவும் செய்வோமாக!

நமது ராஜாங்கத்தார் நமது முன்னேற்றத்தில் கண்ணுங் கருத்துமாக விருந்துவருகின்றனர். இருப்பினும் நம் முன்னேற்றத்தில் பொறாமைகொண்ட சில இதர ஜாதியார்கள் கட்டுப்பாடாகச் செய்யும் தீவினைகளில் அவர்களுக்கு அநுசரணையாக கவர்ன்மெண்டு கீழ்த்தர சிப்பந்திகள் செய்யும் கொடுமைகளினால் நம் ஜாதியார் பலவிடங்களிலும் கஷ்டங்களுக்குள்ளாகி யிருக்கின்றனர். இவைகளை நாம் தெரிவித்தபோது அவைகளை நிவர்த்தி செய்ய ஏற்பாடும் செய்கிறார்கள். உத்தியோகங்களில் நமது ஜாதியார் பலவிடங்களிலும் பரவியிருந்தால் நியாய விரோதமான நடத்தைகள் நடக்க ஏதுவிரா தென்பதை நாம் கவர்ன்மெண்டாருக்கு தெரிவிக்க வேண்டியதிருக்கிறது.

தேச நிலைமை.

பெரியோர்களே!

நமது தேசத்தில் இதுசமயம் பல பாகங்களிலுமுள்ள ஒவ்வொரு வகுப்பாரும் தேசிய ராஜீய ஆசார சுதந்திர விஷயங்களில் முன்னுக்கு வரவேண்டுமென்ற பேராவலுடன் தங்களுக்குள் ஒற்றுமையை நாடி பலவேலை செய்துவருகிறார்கள். பிராமணர் பிராமணரல்லாதார் என்ற கிளர்ச்சியும், பிராமணரல்லாதாருக்குள் தாங்கள் வேதாகம புராணங்கள் மனுஸ்மிருதி குருத்வம் தீண்டாமை யென்ற கொடிய மாயாஸ்திரக் கணைகளால் மயங்கி அடிமைத்தத்துவம் பெற்றுவிட்டோமென்ற

வுணர்ச்சி நாட்டில் பொங்கி எல்லோருக்கும் எவ்விஷயத்திலும் சுதந்திரம் சமத்துமுண்டாதலின் அதை ஒவ்வொருவரும் அடையவேண்டுமென்ற சுதந்திரதாகமும் பெருகி வருகின்றன. நாம் இதுவரை பத்துக் கான்பரன்ஸ்கள் கூடியிருக்கிறோம். ஆனால் இவ்வளவு நாட்களுக்குள் நாம் நமது சங்கமூலமாக பல குறிப்பிடக்கூடிய அரிய காரியங்களை முடித்திருக்கிறோமாயினும் நமக்கு இன்னும் ஆகவேண்டிய காரியங்களை நோக்கும்போது இன்னும் ரொம்பவும் குறைகள் இருக்கின்றன வென்றே சொல்லவேண்டியதிருக்கிறது. ஒவ்வொரு ஜாதியாரும் மற்றைய ஜாதியாரை அடக்கி யிழிவுபடுத்தி அதினால் தாங்கள் மேன்மை கொண்டாடவேண்டுமென்ற அற்ப சிந்தனை நாட்டில் ரொம்பவும் இருந்துகொண்டிருக்கிறது. சில ஜமீன் கணக்குகளிலும் தேவஸ்தானக் கணக்குகளிலும் 'நாடான்' என்றிருப்பதை 'நாடார்' என்று மாற்றுவதற்கு மனம் வராதவர்களுமிருக்கிறார்கள்.

நிலைமையைக் கவனிக்கில் நமது நாட்டில் கொடுமை யிழைக்கப்பட்டு கஷ்டநிஷ்டூரங்களை யனுபவித்தும் இதுதான் நமது தலைவிதியென்று நினைத்திருந்த ஜாதியினர் இப்போது உண்மை அதுவல்ல வென்றும் தங்களுக்கும் சமசுதந்திரம் உண்டென்றும் அதையடைய வேண்டுவது அவசியமென்றும் உணர்ந்து கொண்டு வருவதும், இதுவரை பிறஜாதியினர் கேவலப்பட்டு கஷ்டப்பட அவர்களின் கஷ்டங்கள் மூலம் சுகமனுபவித்த ஜாதியினரில் பெரும்பாலோர் அதை நினைந்து கவலைப்படுவதும், அப்படி பிறத்தியாருக்குண்டாகிற வுணர்ச்சியை லேசாக அடக்கிவிடலாமா வென்ற சூழ்ச்சிகள் செய்வதுமான இப்படிப்பட்ட நிலைகப்பான சமயமாகவிருக்கிறது. நமது சங்க நூற்களிலும் ஐந்திணை மாக்களெனப்படும் அவர்கள் வசிக்கும் நாட்டின் தலைமைக்கேற்றவாறு பேரிடப்பட்டிருக்கின்றனரே தவிர ஆரிய நூற்களில் சொல்லியிருக்கிறபடி நம் நாட்டில் ஜாதிப்பாகுபாடு இருந்ததாக அல்ல ஆதாரங்கள் இல்லை. சுயநலமேனுக்குள்ள ஆரிய நூல்களால் நம் நாட்டில் ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டுவின் கலகங்களும் சச்சரவுகளும் உண்டாகி நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலைமை உண்டாகிவிட்டது. சாஸ்திரங்களென்ற போலித்தந்திர சூழ்ச்சிகளால் எவ்வித சிரமமுமில்லாமல் தங்களுக்கு பிரத்தியேக சுதந்திரமுண்டென்று கொண்டாடுகிறவர்கள் நாட்டின் நிலைமையை உணர்ந்து அநுதாபங்கொண்டு தங்கள் பிடிவாதத்தை விட்டுக்கொடுத்து பரிதாப நிலைமையில் தவிக்கும் ஏனைய ஜாதியாரிடத்தில் கடவுளுக்குப் பயந்து பச்சாதாப இரக்கங்கொண்டு அவர்களும் மானிட ஜன்மந்தான் நாட்டின் சகோதரர்கள் தான் என்கிற அபிமானத்துடன் அவர்களை கைதூக்கிவிட முன்வராமல் இன்னும் சுயநலப் பிரியர்களாயிருப்பின் நமது நாடு ஒற்றுமை யிழந்து அடியோடு கெட்டு நமது பொருளையும் நமது நாட்டின் சுதந்திரத்தையும் நாம் அனுபவிக்க சக்தியற்றவர்களாவோம். நமது நாட்டில் இப்போது கொஞ்சம் நல்லுணர்ச்சியும் விழிப்பும் உண்டாகியிருப்பதாக அறிகுறிகள் தெரிகின்றன. பூராவும் களங்கரகிதமாக உண்டாகி நன்மையடைய வேண்டுமாய் கடவுளைப் பிரார்த்திப்போமாக! நாமும் தாழ்ச்சியுள்ளவர்களை மதித்து அவர்களும் நமது சகோதரர்கள் தானென்ற உணர்ச்சிகொண்டு அன்புடன் அவர்களுடைய நன்மையையும் கருதி முன்னுக்கு கொண்டுவர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாகரிகம்.

கனவான்களே!

நமது ஜாதியினர் அரசுரிமையிழந்த காலமுதல் மற்றைய ஜாதியினரால் ரொம்பவும் இம்சிக்கப்பட்டு சகல சுதந்திரங்களையும் பறிகொடுத்திருந்தும் தங்களுடைய பரம்பரை வழக்கமாகிய ஏகதாரம் செய்தலையும் விதவைகளுக்கு மறுவிவாகம் செய்யாதிருத்தலையும் பெரும்பாலும் நாளதுவரை அனுஷ்டானத்திலேயே வைத்திருக்கின்றனர். இந்த வழக்கம் பிராமணரிலும் நம் ஜாதியிலும் தவிர மற்றைய ஜாதிகளில் அனேகமாக கிடையாது. இது நமது புராதன நிலைமை எவ்விதமிருந்திருக்க வேண்டு

மென்பதை யூகிக்க போதிய சான்றுக்கிருக்கிறது. ஆனால் இதைக்கொண்டு நாம் பெருமைகொண்டு நம்மில் இப்போதிருக்கக்கூடிய குறைகளை நிவர்த்திக்க வழிதேடாமலிருக்கக்கூடாது. நம்முடைய நாட்டின் சீதோஷ்ணம் பொதுவாக எப்போதும் உஷ்ணமாகவே இருக்கக்கூடியது. அன்றாடகம் அதிகாலையில் ஆண் பெண் இருபாலரும் ஸ்னானம் செய்யவேண்டியது அவசியமானது. சுத்தமான உடையும் அளவுக்கு மிஞ்சாத உணவும் தேகாரோக்கியத்திற்கு முக்கியமானது. நம்மில் ஸ்திரீகளுக்கு காது வளர்ப்பது அனாவசியமானதாகவும் அபாயகரமானதாகவு மிருக்கிறது. பட்டணவாசிகளுள் இவ்வழக்கம் அநேகமாக நின்றுவிட்டது. கிராமாந்திரங்களில் அற்பசொற்பமாக இருப்பதாக தெரிகிறது அந்த வழக்கத்தை நிறுத்த முயற்சி எடுக்கவேண்டியது அவசியமாக விருக்கிறது. ஸ்திரீகளுக்கு ருதுவாகுமுன் விவாகஞ்செய்தலும் ஆண்களுக்கு 20-வயதிற்கு முன் விவாகஞ் செய்தலும் ஜாதியினுடைய திரேகபலாட்டியத்தைக் குறைக்கக்கூடிய ஏதுக்களாகவிருக்கின்றன. ஆண்களுக்கு 20 வயதுக்குக் குறையாமலும் பெண்களுக்கு 16-வயதுக்குக் குறையாமலும் உள்ள வயதில் விவாகப் பொருத்தம் ஏற்பட்டால் மணமக்கள் உலகவிஷயம் கொஞ்சம் அறிந்துள்ள நிலைமையும் குடும்ப பாரத்தை தாங்கக் கூடிய வன்மையும் இருவகைப் பெற்றோருக்கும் பொறுப்பில்லாமல் அவர்களுக்கு ஒத்தாசை செய்யக்கூடிய திராணியும் சுமுகம் அறிவு ஆற்றலுள்ள வம்ஸ் விருத்தி செய்ய ஏதுவுமுள்ளவர்களா யிருப்பார்கள். விவாகச் செலவு ஜாஸ்தி செய்வதினால் அனேக குடும்பங்கள் கெடுவதை நாம் நேரில் பார்க்கிறோம். ஆனதால் செலவைக் குறைப்பது ரொம்பவும் அத்தியாவசியமானது. திருமங்கல்யதாரணஞ் செய்வதிற்கு மற்றைய ஜாதிகுருக்களைக் கொண்டு செய்யாமல் நம்முடைய ஜாதி குருக்களை கொண்டு செய்வதுடன் அர்த்தந்தெரியாத அன்னிய பாஷையை அதுசமயம் உச்சரிக்காமல் நமது தாய்ப்பாஷையாகிய தமிழிலேயே கடவுள்வணக்கம் மணமகன் மணமகள் உடன்பாடு முதலியவைகளை இருவர்களும் அதினுடைய கருத்து இன்னதென்பதை நன்றாக தெரிந்துகொள்ளும்படி சொல்லச் செய்யவேண்டியது முக்கியமானதாக விருக்கிறது.

ஆண்களும் பெண்களும் நகைகளை விசேஷமாக அணிந்து கொள்ளுவதால் பெருமிதமும் அலங்காரமும் ஏற்படுவதாக ஒரு பிரமை யிருந்து வருகிறது அறியாமையே. நகைகள் அணிந்து கொள்வதால் பொருட்செலவு ஏற்படுவதுடன் திருடர்களுக்கு தூண்டுதல் ஏற்பட்டு ஆண் பெண் சிறுவர் சிறுமிகளுக்கும் பெரும் அபாயங்கள் ஏற்பட ஏதுவாக இருக்கிறது நகைகள் அணிந்தவர்கள் கொலைபாதகர்கள் வலைக்குள் அகப்படுவதை அடிக்கடி நாம் எவ்வளவோ நேரில் பார்க்கவும் செய்கிறோம் கேள்விப்படவும் செய்கிறோம். தவிர சில அவயவங்களில் அணியும் ஆபரணங்கள் அந்த அவயவங்களின் வளர்ச்சிக்கு பாதகமாகவும் சுகாதாரத்துக்கு கெடுதியாகவும் இருக்கின்றன. ஆனதால் நாளடைவில் நகைகள் அதிகமாக அணிவதை மட்டுப்படுத்தவேண்டியது அவசியமாகயிருக்கிறது.

நம்மில் ஹிந்துக்களினுடைய குடும்ப அனுஷ்டானங்களில் அனேக அறியாமையானதும் கண்டனத்திற் குரியதுமான நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. அதற்கு மூலகாரணம் அனேகமாக நமது பெண்பாலரே. குடும்பத்தில் யாருக்காவது திரேக அசௌக்கியம் அல்லது கோளாறுகள் ஏற்பட்டால் உடனே பெண்பாலர் நம்மையும் அனுசரியாமல் திடீரென்று தெய்வங்களுக்கு நேர்தல்கள் செய்துவிடுகிறார்கள். எந்தத் தெய்வத்துக்கு நேர்தல் செய்கிறார்களோ அந்தத் தெய்வம் உள்ளூரிலே நமக்கு சுயமரியாதையுடன் இலகுவாக கிடைப்பதாக விருந்தாலும் அதற்கு நேர்வதில்லை. அன்னிய வூர்களில் நமக்கு மரியாதைக் குறைவுள்ள விடங்களாக விருந்தாலும் நேர்தல் செய்கிறார்கள். காரணம் ஆழ்ந்து கவனித்தால் பெண்பாலர் தாங்கள் அன்னியவூர்களை போய்ப்பார்க்க வேண்டுமென்ற அந்தரங்க எண்ணத்துடன் அந்நேர்தல்களை செய்வதாக விருக்கி

றதேயொழிய பக்தியால் தூண்டப்பட்டு செய்வதாக எண்ணவிடமில்லை. ஆண்களும் தெய்வங்களின் பேரைச் சொன்னவுடன் அக்காரியங்களில் தங்களுக்கு ரொம்ப மரியாதைக் குறைவுகளும் சிரமங்களுமிருப்பது மனதில் நன்றாக தெரிந்தாலும் தெய்வக் கோளாறுகள் ஏதாவது ஏற்படுமோவென்ற மனமயக்கமும் ஸ்திரீகளினுடைய பிடிவாத எண்ணங்களை மறுக்க முடியாத நிலைமையும் அவர்களை ரொம்பவும் உபத்திரவத்திற்கும் பணச்செலவிற்கும் ஆளாக்குகின்றன. குழந்தைகளுக்கு மொட்டைபோடுதல் என்ற ஒரு வழக்கம் இருக்கிறது. அதுவும் தூரவிடங்களிலுள்ள தெய்வங்களுக்கு நேர்ந்து கொள்ளுகிறார்கள். புருஷர்களுக்கு வியாபாரமுதலிய தங்கள் தொழில் அசௌகரியங்களால் அப்பிரார்த்தனைகளை சீக்கிரம் முடிக்க ஏதுவில்லாமல் ஐந்துவருஷம் பத்துவருஷம் சுணக்கம் ஏற்படுவதுமுண்டு. இந்த காலங்களில் தாய்மார் தங்கள் குழந்தைகளை ரொம்பவும் கஷ்டப்பட வைக்கிறார்கள். பெண்குழந்தைகள் முடிவெட்டாமல் இருப்பதால் அவ்வளவு வித்தியாசமாக தெரியவில்லை. ஆண்குழந்தைகளுக்கும் பெண்கள்மாதிரி கூந்தல் வளர்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். குழந்தைகளுக்கு அதினால் வெயில்காலங்களில் ரொம்பவும் சிரமமிருக்கிறது. குழந்தைகளுக்கு முடியை வெட்டிவிடவாவது க்ஷவரம் செய்யவாவது செய்யவிடுவதில்லை. தெய்வக்கோளாறு ஏற்படுமென்று கண்டிப்பாக சொல்லுவார்கள். அது குழந்தைகள் சிரமப்படுவது தெரிந்தால்தான் ஆடவர்கள் தங்கள்கோரிக்கைபடி சீக்கிரம் விமோசனம் செய்வார்களென்ற உள்ளெண்ணமே தவிர வேறில்லை. சர்வ ரக்ஷகனான கடவுள் நாம் ஏதோ பிரார்த்தனை செய்வதின் மூலம் ஏமாறியாவது மயங்கியாவது நமக்கு ஒரு சாதகம் செய்யமாட்டார். ஆனால் நமக்கு அப்படி நம்பிக்கை யிருக்குமாயின் குழந்தைகளின் முடியை வளரவளர வெட்டி பந்தோபஸ்து செய்து வைத்திருந்து நாம் நேருகிற தெய்வஸ்தலங்களுக்கு அனுப்பிவிடலாம், குழந்தைகள் சுகமடைவார்கள். ஆனால் இவ்வளவிற்கும் காரணம் நமது பெண்மணிகள் தூரதேச விடங்களைப் பார்க்கக் கொண்டுள்ள அபேட்சையென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அது ரொம்பவும் நன்மையான காரியமே. ஆனதால் ஆடவர்கள் பெண்களை வீட்டிலேயே அடைத்து வைத்திராமல் பெரிய பட்டணங்கள் அங்கேயிருக்கும் தொழிற்சாலைகள் நவீனமுறை விருத்திகள் முதலியவைகளைப் பார்க்கச் செய்வார்களானால் அவைகளில் மனந்திரும்பி பழைய கொள்கைகளை விட்டுவிடுவார்கள். நான் இதில் இவ்வளவு தூரம் சொல்லவேண்டியதில்லையென்று நினைக்கலாம். ஆனால் வெளியூர் தெய்வங்களுக்கு நேர்த்திக்கடனென்ற அறியாமையான கொடிய வழக்கம் நம்மில் வேரூன்றி குடும்பங்களுக்கு ஒரு பெரிய தொல்லையாகவும் சிலசந்தர்ப்பங்களில் கண்ணியத்துக்கு குறைவாகவு மிருக்கிறது. ஆனதால் இதுவிஷயமாக நமது சங்கத்திலிருந்தும் இதற்காக தனிப்பிரசாரம் தேவையானதென்று நினைக்கிறேன். நம்முடைய ஆசாரவிஷயங்களில் தள்ளத்தக்கவைகளை தள்ளி கொள்ளத்தக்கவைகளை கொள்ளவேண்டியது அவசியமானது.

ஒற்றுமை.

பாண்டியகுல மணிகளே!

நமதுஜாதி முன்னேற்றமடைவதற்கு நம்மில் ஒற்றுமை அவசியமானது. நமதுமுன்னோர்கள் நாம் செய்த தவப்பயனாக நமது பொதுநன்மைக்காக நமது ஜாதியார் வசிக்கும் அநேகமாக எல்லா இடங்களிலும் மகமை யென்ற ஒரு நன்கொடை வசூலிக்கும் வழக்கத்தை தொன்றுதொட்டு ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். அதைக் கவனித்தால் நமது ஜாதியார் எப்போதும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்திருக்கிறார்களென்பது நிதர்சனமாகிறது. இடையில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டாலும் அவைகளை உடனுக்குடனே நிவர்த்திசெய்து வந்திருக்கிறார்கள். உலகத்தில் ஒவ்வொரு ஜாதியாரும் தாங்கள் தீவிரமாக முன்னேற வேண்டுமென்று இது சமயம் ஆவல்கொண்டு வருவது நமக்கு பிரத்

தியக்ஷமாக விருக்கிறது. நாமுங் கவனக்குறைவாக விருப்போமாகில் முன்னேற்றம் என்னும் படியில் நாம் கீழேவிடப்படுவோம். நமக்கு பல விடங்களிலும் நமது முன்னோர்கள் ஏற்படுத்திவைத்த மகமை வசூல் மூலம் உண்டான பேட்டைகளும் கட்டடங்களும் வரும்படிகளும் இருக்கின்றன. இவைகளை நம்மில் அபிப்பிராய பேதமில்லாமல் ஒற்றுமையோடு நமது குல முன்னேற்றத்திற்கு உபயோகிப்போமானால் நாம் சகல நன்மைகளையும் அடைய எவ்வித தடையுமில்லை. நமது சங்கம் நமது முன்னேற்றத்திற்கு பொது ஸ்தாபனமாக விருக்கிறது. பணச்செளகரியம் இருக்குமானால் நமது சங்கமூலம் நாம் அநேக சாதகங்களை நமது ஜாதிக்கு செய்ய ஏதுவாகுமென்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். தலைக்கட்டுவரி வசூல் இன்னும் பாக்கி யிருப்பதாகவும் தெரிகிறது. நம்மில் பிரபல ஊரிலுள்ள தனவான்கள் ஏதோ மனத்தாங்கல் கொண்டிருப்பதாக அறிகிறோம். அதுவும் சீக்கிரம் நிவர்த்தியாகுமென்று நம்புகிறேன். நம்மில் ஒற்றுமைக் குறைவு ஏற்படாமல் எப்பொழுதும் காரியங்கள் ஒழுங்காக நடந்தேறி வரவேணுமாய் சர்வேசுரனை பிரார்த்திக்கிறேன். நம்மில் அபிப்பிராயபேதங்கள் ஏற்படுஞ் சமயம் மெஜாரிட்டியாருடைய தீர்மானப்படி நடத்திக்கொண்டால் நம்மில் எப்பொழுதும் ஒற்றுமைக் குறைவு ஏற்பட வழியிராது.

சிக்கனம்.

மாண்பினரே!

நமது தொழில் வியாபாரம் குடும்ப விருத்தி முதலிய ஒவ்வொரு காரியங்களுக்கும் பங்கம் வாராமல் விருத்தி யேற்படுவதற்கு சிக்கனம் அல்லது செட்டு முக்கியமானது. ஒரு தொழில் செய்வோர் அதற்கு வேண்டிய யந்திரம் தட்டுமுட்டு சாமான்கள் தொழிலாளிகள் முதலிய ஸ்தாபனங்களை தொழில் அளவிற்கே வைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக ஒருவர் ஜின்னிங் பாக்டரி ஸ்தாபித்து நாலு ஜின்வைத்து வேலைசெய்கிறார். அதற்கு மெஷின் 20-குதிரை பவருள்ளது போதுமானது. கட்டடம் ரூ 1000 செலவழித்து கட்டினால் போதும் தொழிலாளர் 10பேர் போதும். அப்படியிருக்க 40-குதிரை பவருள்ள மெஷினும் 10000 ரூபாயில் கட்டடமும் 40 தொழிலாளரும் வைத்து வேலை செய்வாரானால் அவர் தன்னுடைய தொழிலில் ஏராளமான நஷ்டம் அடைவதுடன் தொழிலையும் இழக்க நேரிடும். வியாபாரத்திலும் அப்படியேதான். ஒரு வியாபாரி தனக்கு ஒரு குமாஸ்தாவும் இரண்டு உதவியாட்களும் ஒரு வியாபாரஸ்தலமும் போதுமானதாயிருக்க 4 குமாஸ்தாக்களும் 10 உதவியாட்களும் 4 கிட்டங்கிகளும் வைத்து வியாபாரஞ்செய்தால் அவர் கட்டாயம் நஷ்டமடைய வேண்டியதாகவே வரும். உத்தியோகமும் அப்படியே. மாசம் 100 ரூபாய் வரும்படியுள்ள ஒரு உத்தியோகஸ்தர் 150 ரூபாய் செலவழிப்பாரானால் அவரும் கஷ்டமடைய வேண்டி வரும். ஆனதால் நாம் எந்தக்காரியம் செய்தாலும் எந்தத்தொழில் செய்தாலும் சிக்கனத்தைக் கைக்கொள்ள வேண்டியது ரொம்பவும் அவசியமானதா யிருக்கிறது.

ஒத்தாசை.

நமது குலமுன்னேற்றத்துக்கு அவசியமானது சமூக ஒத்தாசையே. நம்மில் செல்வவான்களாக வுள்ளவர்கள் நம்மில் ஏழைகளாயும் பிறரால் பலவிடங்களில் இம்சிக்கப்பட்டு கஷ்டமடைந்து கொண்டு மிருப்பவர்களுக்கு வேண்டிய தேறுதல். தொழில் ஒத்தாசைகள் செய்யவேண்டியது முக்கியமாக விருக்கிறது. நமது சங்கமூலமாகவும் செய்யவேண்டியதிருக்கிறது. பலவிடங்களில் நம்மவர்கள் நம் ஜாதிக்குரியதல்லாத கள்ளிறக்குந் தொழிலை அது நமக்கு அடாதது நிந்தைக்குரியதென்று விட்டிருக்கிறார்கள். விடவுந் தயாராக விருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அத்தொழில்களை விடும்போது தங்கள் ஜீவனத்திற்கு வேறு ஏதுவில்லாமலிருக்கிறார்கள். இன்னும் சிலவிடங்களில வேறு கேவலமான தொழில்களை காலமாறுபாட்டால் செய்கிறதாகவும் அவர்களும் அத்தொழில்களை நிறுத்தும்போது கஷ்டமடைவதாகவும் தெரிகிறது. ஆனதால் இப்படி கஷ

டங்கள் ஏற்படுஞ் சமயங்களில் நிவர்த்தி செய்வதற்காக நமது சங்கமூலமாக பலவிடங்களிலும் நமது தொழிலாளர் கஷ்டநிவர்த்தி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி தொழில் கிடையாமல் இருப்போருக்கு தற்காலமாக சொற்ப உதவியும் இன்னின்ன ஊருக்குப் போனால் இன்னின்ன தொழில் செய்ய தோதிருக்கிறதென்ற விவரமான அறிக்கைகளுங் அப்படி அன்னிய இடங்களுக்கு தொழில் செய்யப்போக சம்மதிப்போருக்கு அவர்கள் இருக்கக்கூடிய விடங்களுக்கு சமீபமிருக்கும் ஸ்தாபனமூலம் வேறுவிடங்களிலுள்ள நம்மவர்களுக்குசிபார்சு கடிதங்களுங் கொடுக்க ஏற்பாடுஞ் செய்ய வேண்டியது ரொம்பவும் அத்தியாவசியமானதாக விருக்கிறது. சிலவிடங்களில் நம்மவர் படும் சிரமங்களைப் பார்த்தால் அவர்களை அறவே பூராவும் அந்த விடங்களிலிருந்து அப்புறப்படும்படி செய்து வேறு இடங்களில் குடியேறச்செய்து முன்னுக்கு கொண்டுவரவேண்டிய நிலைமையாகவிருக்கிறது. நம்மவர்கள் பெருக்காகவிருக்கும் தூத்துக்குடி, கோவில்பட்டி, சாத்தூர், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, திருமங்கலம், மதுரை, திண்டுக்கல், மதராஸ் முதலிய விடங்களில் மேலே கண்ட விதம் கஷ்டப்படும் ஜனங்கள் ஆயிரக்கணக்காக வந்தாலும் தொழில் செய்ய ஏதுக்களும் இடவசதிகளும் இருக்கின்றன. ஆனால் நமது சங்கத்தில் நமது ஜாதியில் ரொம்பவும் கஷ்டத்துடன் கேவலமான தொழில் செய்வோரை மீட்டு ஆதரவுசெய்ய தீர்மானங்கள் செய்து அவசியமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன் செல்வவான்களான சன்னியர்கள் தாராள நோக்கத்துடன் இக்காரியங்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று வணக்கமாக கோருகிறேன். நம்மில் பெரிய உத்தியோகங்களிலிருக்கும் சனவான்கள் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டியதும் பெரிய வியாபாரிகள் சிறு வியாபாரிகளுக்கு ஒத்தாசை செய்யவேண்டியதும் அவசியமாகவிருக்கிறது.

படிப்பு.

படிப்பை நான்கு வகையாகப் பிரிக்கலாம். பாஷைப் படிப்பு, உத்தியோகப் படிப்பு, சாஸ்திரப் படிப்பு, தொழிற்படிப்பென நான்காம். பாஷைப் படிப்பு இல்லாவிட்டால் ஒரு மனிதன் பல நாட்டிற்கு போகவும் அவ்விடத்திய மனிதர் பேசுவதையும் நடந்துகொள்வதையும் அறிய இயலாது. உத்தியோகப் படிப்பில்லாவிட்டால் சர்க்காரிலோ ஆபீஸ்களிலோ உத்தியோகம் பார்க்கமுடியாது. சாஸ்திரங்களை வாசித்தால் முன்னோர்களுடைய அபிப்பிராயங்களை அறியவுந் தத்துவ விசாரணைகள் செய்யவும் ரசாயனம் இயற்கைப் பொருள்கள் இவைகளின் தன்மைகளை அறியவும் செயற்கையில் நூதனப்பொருள்கள் செய்யும் வகை தெரியவும் ஏது உண்டாகிறது. தொழிற்கல்வியானது வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முதலியவைகள் செய்யப் பழகுதலாம். கல்வியானது மனிதனுடைய அறிவு விருத்திக்கும் சம்பாத்தியத்திற்கும் அத்தியாவசியமாகவிருக்கிறது. நமது தாய்பாஷையாகிய தமிழ்படிப்பு நமக்கு முக்கியமானதாகிலும் நம்மை ஆளுவோருடைய பாஷை ஆங்கிலமாகையாலும் அப்பாஷை எந்தநாட்டிலும் முக்கியமாக வழங்கிவருவதாலும் நம்மில் ஒவ்வொருவரும் ஆங்கில பாஷையும் கற்றிருக்கவேண்டியது அவசியமாகிறது. நமது இந்தியாவில் ஜனக்கணிதத்தில் ஒவ்வொரு ஜாதியாரும் படித்திருக்கிற தாரதம்மியத்தை கவனிக்கில் நாம் ரொம்பவும் கீழ்ப்படியிலிருக்கிறோம். ஸ்திரீகளுடைய படிப்பு அதிகக் குறைவாகவிருக்கிறது. நமது ஜாதியார் ஆண் பெண் இருபாலரும் படித்திருந்தாலொழிய நமது சமூகத்தின் முன்னேற்றம் தடைப்பட்டேயிருக்கும். ஆனதால் நாம் படிப்பு விஷயத்தில் ரொம்பவும் அக்கரையெடுத்து நமது சிறுவர் சிறுமியர்களை அவசியம் படிக்கச்செய்யவேண்டும். தென்ஜில்லாக்களில் சிலவிடங்களில நமது ஜாதியார் பிறரால் ரொம்பவும் உபத்திரவிக்கப்பட்டுகஷ்ட நிலைமையில் கஷ்ட ஜீவனம் செய்துக்கொண்டிருப்பதாக தெரிகிறது. அவர்களின் பின்சந்ததியாவது நல்ல நிலைமையை படையும்படி குழந்தைகளுக்கு நமது சங்கமூலமாகவும்

இதர ஸ்தாபனங்கள் மூலமாகவும் இலவசமாக பிரதமக்கல்வி கற்க பள்ளிக்கூடங்களும் அதில் தேறிய பிள்ளைகளுக்கு இதரவிடங்களுக்குப் போய் படிக்க ஸ்காலர் ஷிப்களும் ஏற்படுத்தி ஒத்தாசை செய்தால் அப்பிள்ளைகள் சீக்கிரம் முன்னுக்குவரக்கூடிய வழியும் தங்களைத் தாங்களே பின்னால்வருகிற வாழ்க்கையில் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய நிலைமையும் தானே உண்டாகும். பெண்களும் கல்விகற்கவேண்டியது அத்தியாவசியமானது. அதினால் அவர்களுடைய அறிவு விருத்தியாவதுடன் குடும்பக் கணக்கு முதலிய நிர்வாகங்களை செவ்வனே நடத்தத்தக்கவர்களாவார்கள். நமது கவர்ன்மெண்டார் பலவிடங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி எல்லோரும் படிக்க சௌகரியம் செய்துவருகிறார்கள். ஆனால் அவைகள் ஜனத்தொகையின் பெருக்குக்கு போதியதாகவில்லை. நம்மவர்கள் சொந்தப்பண்டுகளிலிருந்தும் பொதுமகமை ஐவேஜிலிருந்தும் அநேகவிடங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகள் மூலம் நம் பிள்ளைகளுக்கு கல்விகற்க ஏதுவிருந்து வருகிறது. ஆனால் நமது ஜாதியிருக்கும் எல்லாப்பக்கங்களிலும் அப்படியிருக்கிறதென்று சொல்லமுடியாது. ஆனதால் பள்ளிக்கூடம் இல்லாதவிடங்களில் நமது சங்கமூலம் சிறுகிராமங்களுக்கு பிரைமரி பள்ளிக்கூடங்களும் கொஞ்சம் பெரியவூர்களில் செக்கெண்டரி பள்ளிக்கூடங்களும் பெரிய பட்டணங்களில் ஹைஸ்கூல் காலேஜ் முதலிய உயர்தரப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தி நமது பிள்ளைகள் படிக்க ஏதுசெய்ய வேண்டியது அவசியமாகவிருக்கிறது. ஒரு ஜாதி முன்னேறவேண்டுமானால் கல்வியே முக்கியமானதாகவிருக்கிறது. ஆனதால் நமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தவறாமல் ஆண் பெண் இருபாலரும் கட்டாயமாக கல்விகற்று நன்மையடையவேண்டுமென்று சர்வேஸ்வரனை பிரார்த்திக்கிறேன்.

வழக்குகளும்: கோர்ட்டுகளும்.

உலகவாழ்க்கையில் நம்மில் வியாபாரம் கொடுக்கல் வாங்கல் நிலப்பாத்தியம் இவைகளில் தர்க்கம் தகரார்கள் அடிக்கடி ஏற்படுவது சகஜமாகவே யிருக்கிறது. அவைகள் காரணமாக கோர்ட்டுக்குப் போவோமானால் சில சந்தர்ப்பங்களில் 10-வருஷம் 15-வருஷம் வரை விவகாரம் முடியாமலிருக்கிறது. கோர்ட்டு பீஸும் வக்கீல்கள் பீஸும் தாங்கமுடியாதபடியாகிவிடுகிறது. மனக்கவலையும் ஜாஸ்தியாவதால் நமது தொழில்களை சரியாக்கவனிக்க முடியாமல் தொழில் முடக்கமும் நஷ்டமும் ஏற்படுகிறது. தேக சிரமமும் அலைச்சலும் இவ்வளவென்று சொல்லமுடியாது. சாக்ஷிகளைச் சரிக்கட்டும் வேலையோ எல்லாவற்றையும்விட கவலைக்கிடமானதாக விருக்கிறது. முந்திய காலங்களில் நமது கிராமங்களிலும் பட்டணங்களிலும் ஏதாவது வழக்குகள் ஏற்பட்டால் நாலு பெரிய மனுஷாளை பஞ்சாயத்தாராக கோரி அவர்கள் இருதரப்பையும் கேட்டு இருவருக்கும் சிரமமில்லாமல் விவகாரங்களை விலக்கிவிட்டிருக்கிறார்கள். இந்தக் காலத்தில் எடுத்த விவகாரங்களுக்கெல்லாம் கோர்ட்டுக்கே போகும்படி யிருக்கிறது. தவிர இன்சால்வெண்டு கோர்ட்டென்று ஒருகோர்ட்டு ஏற்பட்டிருக்கிறது. அது வியாபாரிகளுடைய பரம்பரையான நாணயத்தைக் கெடுக்க ஏற்பட்டிருக்கிறது. வியாபாரிகளில் சிலர் வியாபாரத்தை வகையில்லாமல் செய்து கொண்டு குடும்பச் செலவு, கலியாணம், கட்டடம் முதலிய செலவுகளும் டம்பமாக செய்துவிட்டு பிறத்தியாருக்கு ஜாஸ்தியான கடன் கொடுக்கும்படியான நிலைமை ஏற்பட்டவுடன் இம்ஸை பொருக்காமல் இன்ஸால்வெண்டாகிறார்கள். அக்கோர்ட்டுக்கு கேஸ்கள் போய்விட்டால் கடன் கொடுத்தவனுடைய பணமும் கடன் வாங்கினவனுடைய பணமும் எமனுடைய நகரத்திற்குப்போன உயிர்கள் போலாகின்றன. அக்கோர்ட்டில் சில வழக்குகள் 2-தலைமுறை பார்த்தும் முடியாமலு மிருக்கின்றன. அக்கோர்ட்டு இருப்பதினாலேயே ஜனங்கள் ஊக்கமாக கடன்வாங்கி டாம்பிகமாகவும் தாறுமாறாகவும் செலவு செய்கிறார்கள் அக்கோர்ட்டு இருக்கும்வரை நாட்டில் சாதாரண ஜனங்கள்

பெருஞ்செலவு செய்வது நிற்கப்போவதில்லை. கவர்ண்மெண்டார் இதை கவனித்து இந்த இன்சால்வெண்டுக் கோர்ட்டுகளை எடுத்துவிட்டால் ஜனங்களுக்கு மெத்தவும் நலமாயிருக்கும். வியாபாரிகளும் நிலவழக்குகளுள்ள மற்ற ஜனங்களும் தங்கள் வழக்குகளுக்கு கோர்ட்டுக்கு போவதால் ஏற்படுகிற சிரமங்களைமேலே குறிப்பிட்டிருக்கின்றேன். ஆனதால் நமது ஜாதியாரில் எல்லோரும் ஒவ்வொரு கிராமங்களிலும் நமக்குள்ளேயே பஞ்சாயத்து நியமித்து நம்முடைய விவகாரங்களை தீர்த்துக்கொள்வோமானால் காலதாமதமும் சிரமமும் பணச்செலவும் இல்லாமல் சுகமாக வாழ ஏதுவாயிருக்கும். நமது சங்கத்தில் பஞ்சாயத்து தீர்மானம் முன்னமே ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு மெம்பர்கள் ஏற்பட்டு நடவடிக்கைகள் நடத்தியதாக தெரியவில்லை. ஒவ்வொரு கிராமங்களிலும் நமக்குள் பஞ்சாயத்து சபை வேண்டியது முக்கியம்.

நமது முன்னேற்றம்.

நம்மில் பலவிடங்களிலும் பெரிய மிராசுதார்களும் விவசாயிகளும் வியாபாரிகளுமிருக்கிறார்கள். உத்தியோகஸ்தர்களுமிருக்கின்றார்கள். பலவிதமான தொழிற்சாலை உடையவர்களுமிருக்கிறார்கள். இவைகளில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இன்னும் நாம் தற்கால நிலைமைக்கேற்றவாறு போதிய முன்னேற்றமுடையவர்களென்று சொல்வதற்கில்லை. நமது ஜாதியாரில் இன்னும் ஒருவராவது I. C. S. பரீக்ஷை தேரியவரில்லை. இது நமக்கு மனவியாகூலத்தை உண்டாக்கக் கூடியதாகவிருக்கிறது. வியாபாரிகளில் இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான், அமெரிக்கா முதலிய அன்னிய நாடுகளில் வியாபாரசாலைகள் ஏற்படுத்திச் செய்பவர்கள் இன்னும் ஒருவருமில்லை. விவசாய விஷயத்தில் இப்போது உழவு முதலிய எல்லா விஷயங்களுக்கும் நூதன யந்திரங்களும் நிலத்திற்கு நூதன முறைகளில் கொழுமையாக்கக்கூடிய உரங்களும் வந்திருக்கின்றன. இவைகளை நம்மிலுள்ள எல்லா விவசாயிகளும் கையாளுவார்களானால் விவசாயத்தில் ஏராளமான லாபம் அடையலாம். ஆனதால் நம்ஜாதியார் உயர்ந்த படிப்பு படிக்கவும் அன்னியநாட்டு வியாபாரங்கள்செய்யவும் விவசாயத்தில் நூதன முறைகளை கையாண்டுநடத்தவும் வேண்டியது அவசியமாகவிருக்கிறது.

ஸ்தல ஸ்தாபன ஆட்சிகளில் நம்மவர்கள் ஸ்தானங்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் நமது ஜாதியின் ஜனத்தொகைக்கு தக்கவாறு ஸ்தானங்கள் கிடைக்கவில்லை. ஆனதால் நமக்கு அவைகளில் இன்னும் விசேஷ ஸ்தானங்கள் பெற முயற்சி செய்யவேண்டியது முக்கியமானது. கவர்ண்மெண்டாரை நமக்கு போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ள வேண்டியதுமவசியம்.

கோவில்கள்.

நம்மவர்களில் ஹிந்துக்களுக்கு சொந்தத்தில் அநேக இடங்களில் கோவில்களும் தெய் சந்நிதானங்களும் இருக்கின்றன. மற்றப்படி இந்தியாவெங்கும் எல்லா ஜாதியினருக்கும் பொதுவான பல பிரபலமான கோவில்கள் இருக்கின்றன. நமது இந்தியாவில் கோர்ட்டுகளில் நடக்கும் விவகாரங்களை கணக்கெடுத்துப்பார்த்தால் குறிப்பிடத்தக்க ஒரு பாகம் கோவில் சம்பந்தமானதாகவும் அவைகளின் நிர்வாகம், பாத்தியபாத்தியம் சம்பந்தமானதாகவும் இருக்கக் காணலாம். இதனால் பொதுஜனங்கள் எவ்வளவு சிரமங்கள் அடைகிறார்களென்றும் பெரிய கோவில்கள் மடங்களில் எவ்வளவு கலகங்கள் கொலைகள் நடக்கின்றனவென்றும் நாம் கேள்விப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்கு காரணம் சுயநலமுள்ள வகுப்பார் கோவில்களையும் தர்ம ஸ்தாபனங்களையும் தங்களுடைய சொந்த நன்மை சௌகரியங்களுக்கு ஒரு ஆட்சிக் கருவியாகக் கைப்பற்றிக்கொண்டு மற்ற வகுப்பாருக்குள் பிரிவினையும் அபிப்பிராய பேதமும் ஏற்படச் செய்வதேயாகும். இந்த சூழ்ச்சிகள் நாள் செல்லச்செல்ல வெளிக்குவந்து ஜனங்களும் உஷாராகிவருகிறார்கள். நமது சென்னை கவர்ண்மெண்டாரும் இதையறிந்து பொதுக் கோவில் நிர்வாகத்திற்காக ஒரு தனி நிர்வாகம்

ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நிர்வாகஸ்தர்கள் பொது ஜன நன்மைகளை கவனித்து காரியங்களை நடத்துவார்களென்று நம்புகிறேன்.

நமது சொந்தக் கோவில்கள் ஏராளமாக விருந்தும் நமது கோவில்களுக்கு நமது ஜாதியார் அன்றாடம் சுவாமி தெரிசனம் செய்யப் போகும் கணக்கைப் பார்த்தால் நூற்றுக்கு ஒன்றுகூட இராதென்று நிச்சயமாக சொல்வேன். அப்படியிருக்க மேலுமேலும் பெரும் பணச் செலவுசெய்து கோவில்களைக் கட்டுவது நமது தேவைக்கு அவசியமில்லாததாக விருக்கிறதென்று நினைக்கிறேன். நமது ஜாதி நிலைமைக்கு இப்போது கோவில்களுக்கு செலவிடும் பணங்களை நமது ஜாதியினருக்காகக் கல்வி வியாபாரம் கைத்தொழில் முதலிய சாதனங்களுக்கு உபயோகிப்போமானால் நாம் அதிதீவிரமாக உலகவாழ்க்கை என்னும் பந்தய ஓட்டத்தில் ஓடி அதி உன்னத நிலைமை எய்துவோமென்பது நிச்சயம்.

பத்திரிகைகள், சங்கங்கள்.

உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும் பத்திரிகைகள் மூலமாகவே ஆட்சிமுறை, வியாபார முறை, தொழில் முறை சம்பந்தமான விஷயங்கள் வெளியாகின்றன. பல நாட்டினரின் அபிப்பிராயங்களும் செய்திகளும் வெளியாகின்றன. பத்திரிகைகள் இல்லாதுபோனால் உலகமே இருண்டது போலவும் ஜனங்கள் கண்ணற்றது போலவும் பெரிய தடுமாற்றம் ஏற்படும். பொது நோக்கத்தோடு நடக்கும் பல பத்திரிகைகளிருப்பதுடன் ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் பிரத்தியேக நன்மையைக் கருதியும் பத்திரிகை நடத்தி வருகிறார்கள். நமக்கும் சில பத்திரிகைகள் நடந்துவருகின்றன. அவைகள் வாரப் பதிப்பாகவும், மாதப் பதிப்பாகவும் இருக்கின்றன. தினசரி பத்திரிகையொன்று ரொம்பவும் அவசியமானதாக விருக்கிறது. அதுவும் நமது ராஜதானி தலைநகரிலிருந்து வெளியானால் நல்லது.

நாம் ஒன்றாகக்கூடி அபிப்பிராயங்களை கலந்துபேசி சமூகவிஷயம், வியாபாரம், விவசாயம், கைத்தொழில் விஷயங்களை யோசனைசெய்து வேண்டிய விருத்திகள் செய்வதற்கு தனித்தனியாகவும் பொதுவாகவும் சங்கங்கள் அவசியமாக விருக்கிறது. வியாபாரம் விவசாயம் கைத்தொழில் இவைகளுக்கு தனிச் சங்கங்கள் இருந்தால் தொழில்செய்வோர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் தொழில்களுக்கு வேண்டிய சட்டதிட்ட கட்டுப்பாடுகள், விருத்தியாம்சத்திற்கு வேண்டிய சாதனங்கள் இவைகளை ஆலோசனை செய்து முன்னுக்குவர ஏதுவாக விருக்கும். ஆனதால் நமது சமூகத்தில் ஒவ்வொரு இடங்களிலும் வியாபாரிகள், விவசாயிகள், கைத்தொழில்காரர்கள் தங்களுக்குள் சங்கங்கள் ஏற்பாடு செய்து கொள்வதுடன் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைகொண்ட சங்கங்கள் ஒன்றுசேர்ந்து ஜில்லா சங்கமாகவும் எல்லாவற்றிற்கும் மேலே தலைமை சங்கம் ஒன்றும் ஏற்பாடு செய்வார்களானால் நாம் தொழில்களில் கூடிய சீக்கிரம் மேலோங்கி வருவோமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

சமூக விஷயமாக வேண்டிய வேலைசெய்ய நமது நாடார் மஹாஜன சங்கம் ஏதுவானது. இதுவரை ஏற்பட்டிருக்கிற கிளைச்சங்கங்கள் தவிர ஒவ்வொரு வூரிலும் தவறாது கிளைச்சங்கங்கள் ஏற்படவேண்டியது அத்தியாவசியமானது. நமது சகோதரர்கள் இதை மனதில் வைத்து கூடியசீக்கிரம் தங்கள் தங்கள் ஊரில் கிளைச் சங்கங்களை ஸ்தாபனஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது கான்பரன்ஸ்.

நமது சங்கத்தின் விதிகளின்படி நமது கான்பரன்ஸானது வருஷத்திற்கு ஒருதடவை கூடவேண்டும். அந்தப்படி ஒவ்வொரு வருஷமும் தவறாது கான்பரன்ஸை கூட்டவேண்டுமென்றும் பிரபல வூர்களிலுள்ள கனவான்கள் பொதுவிஷயத்தில் அபிமானங்கொண்டு எவ்வித அபிப்பிராய பேதங்களிருப்பினும் அவைகளை பொது நலத்திற்காக விட்டுக்கொடுத்து ஒவ்வொரு வூர்களிலும் ஒவ்வொரு வருஷமாக நடத்திவர வேண்டுமென்றும் வணக்கமாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது கான்பரன்ஸ் நடக்கும் நாட்களில்

அவ்வூர்களில் நம்மவர்களின் பொருட்காட்சியொன்று தவறாது நடத்தவேண்டும். பொருட்காட்சியினால் வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் கைத்தொழில்காரருக்கும் எவ்வளவு நன்மையுண்டாகுமென்பதை நான் சொல்லத் தேவையில்லை.

நமது சமூகத்தார் ஒன்றுகூடி முதல்முதல் நடத்திய கான்பரன்ஸ் இந்நகரில் கூடிய க்ஷத்திரிய மகாஜன சங்கமே. அதுகூடி சுமார் 30-வருஷங்களாகின்றன. அதின்பின் ராவ்பஹதூர் T. ரத்தினசாமி நாடார் அவர்களின் முயற்சியால் பொறையாற்றில் கூடிய முதலாவது கான்பரன்ஸ் முதல் இதுவரை பத்து கான்பரன்ஸ்கள் கூட்டியிருக்கிறோம்.

நமது சமூக முன்னேற்றத்திற்கு அத்தகைய கான்பரன்ஸ்கள் அத்தியாவசியமென்றும், கல்வி பிரதானமென்றும், அவைகளின் அவசியத்தை நமது ஜனங்கள் நன்றாக உணராத காலத்தில்; தான் உணர்ந்து அதுவிஷயமாக கங்கணம் கட்டிக்கொண்டு எவ்வித எதிர்ப்புகள் வந்தும் பொருட்படுத்தாமல் நமது சமூக முன்னேற்ற விஷயத்தில் ஈடுபட்டவர். சென்ற வருஷம் இவ்விடத்தில் நடந்த நமது ஒன்பதாவது கான்பரன்ஸுக்கு உபசாரணைக் கமிட்டிச் சேர்மன் ஸ்தானம் வகித்து அட்ரஸ் மட்டும் தயார்செய்திருந்த நிலைமையில் கான்பரன்ஸ் தினத்துக்கு ஒருவாரத்திற்கு முன் காலஞ்சென்ற மகா-ள-ள-ஸ்ரீ கூ. பூ. அ. வடிவேல்முருக நாடாரவர்களே. அவருடைய ஆவி இப்பொழுதும் நமது கான்பரன்ஸில் ஆஜராகியிருந்து நாம் நடத்துவதை கவனித்துக்கொண்டிருக்கிறதென்றே நம்புகிறேன்.

அவர் ஸ்தானத்தை பூர்த்திசெய்து அட்ரஸ் வாசித்தவரும் அவருடைய ஜேஷ்ட புத்திரரும், நமது சங்கத்தின் காரியதரிசி ஸ்தானம் வகித்தவரும், தந்தையைப்போலவே பொதுநலப் பிரியருமான ஸ்ரீமான் கூ. மு. அ. வ. பழனியப்ப நாடாரவர்களின் அகால மரணமானது நமக்கு ரெம்பவும் விசனத்தை யுண்டாக்குகிறது. உபசாரணைக்கமிட்டியின் சார்பாக நான் அவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனவான்களே!

பிராமணரல்லாதாரின் தலைவரும், பொது ஜனவிஷயத்தில் பெரும் அக்கரை கொண்டவரும், கஷ்டப்படுவோர்களின் விஷயத்தில் இரக்கங்கொண்ட பெருந் தியாகியுமான திருவாளர் சர் P. தியாகராய செட்டியாரவர்களின் மரணத்தால் அவரிடத்தில் அபிப்பிராயபேதமுடையவர்களும் மனம் வருந்துகின்றனரென்றால் அன்னாருடைய பிரிவு நமக்கு எவ்வளவு துயரைத் தருகிறதென்பதை நான் விசேஷமாகச் சொல்லவேண்டியதில்லை. அவர் நமது குலமுன்னேற்றத்தில் ரெம்பவும் அக்கரை கொண்டவர். அவருடைய குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

புண்ணியசீலர்களே!

நாம் செய்த தவப்பயனாக நமது சென்னைக் கவர்ன்மெண்டின் நிர்வாகசபை வைஸ் பிரஸிடெண்ட் ஹானரபிள் C. P. ராமஸ்வாமி அய்யரவர்கள் C. I. E., நமது வேண்டுகோளுக்கிசைந்து நம்மத்தியில் பிரசன்னமாகி அன்புடன் அக்கிராசனம் வகித்து நமது ஜாதிய முன்னேற்ற விஷயமாக நமக்குவேண்டிய புத்திமதி ஆலோசனை அபிப்பிராயங்களை ஒரு திர்க்கதரிசியைப்போல நமக்கு தெரிவிக்கப்போகிறார்கள். அவர்கள் சொல்லும் வாக்கியங்களைக் கேட்டு அதின்படி நாம் நடப்போமானால் நமது சமூகம் ரெம்பவும் முன்னேற்றமடையுமென்று நான் சொல்லத் தேவையில்லை. அன்னவர்களின் சொற்பெருக்கை ஒருமனதுடன் கேட்டானந்திக்கும்படி உங்களை வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சகோதரர்களே!

உபசாரணைக் கமிட்டியாராகிய எங்களது வேண்டுகோளுக்கிசைந்து பொதுநலப் பிரியமென்னும் பாசத்தால் கட்டுண்டு தங்களது காலப்போக்கையும் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் இவண் ஆஜராகி எங்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்து எங்களைக் கௌரவித்த உங்கள் எல்லோருக்கும் இன்னொரு தடவை

எனது மனமார்ந்த வந்தனமளிக்கிறேன். வரவேற்புக் கமிட்டிச் சேர்மன் ஸ்தானத்தில் நான் என் மனதில் எழுந்த எண்ணங்களை தங்கள் சமூகத்தில் தெரிவித்துக்கொண்டேன். அவைகளை கிரஹித்து வேண்டிய நடவடிக்கைகளை செய்து முடிப்பீர்களென்று நம்புகிறேன். நம்மை ஒன்றுகூட்டிவைத்த கடவுளை வணக்கஞ்செய்து நமது கான்பரன்ஸ் இனிது நடைபெறும்படியும் சங்கநோக்கங்கள் நிறைவேறும்படியும் அனுக்கிரஹம் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

சுபம்! சுபம்! சுபம்!

சென்னைக் கவர்ன்மெண்டின் நிர்வாக சபை உப அக்கிராசனர்,
ஹானரபிள் ஸர், ஸி. பி. இராமசாமி ஐயர் C. I. E.,
அவர்களின் உபந்நியாசம்.
8--6—25

சீமான்களே! சீமாட்டிகளே!

இத்தகைய மஹாநாடுகளின் நோக்கமும் பயனும் என்ன? இது ஓர் அவசியமான கேள்வி. நீங்கள் சொல்லிலும் செய்கையிலும் இக்கேள்விக்குப் பதிலளிக்கும் விதத்திலிருந்து உங்களது நல்லெண்ணமும் தேசாபிமானமும் விளங்கும். இத்தகைய ஜாதிய மஹாநாடுகள் ஒரு ஜாதிக்கும் இன்னொரு ஜாதிக்கும் காலவித்தியாசத்தால் இருந்துவருவதும், சாந்தத்தினாலும் பரஸ்பர தயாள குணத்தினாலுமே நீக்கக்கூடியதுமான வேற்றுமைகளை மென்மேலும் வளர்த்தற்கு உபயோகப்பட்டாலும், அல்லது உங்கள் சமூகத்தை மேன்மைப்படுத்தி அதனால் இதர சமூகத்தாரின் துவேஷத்தை வளர்ப்பதற்குக் காரணமாயிருந்தாலும், உங்கள் உரிமைகளை நிரூபித்து நிலைநாட்டுவதற்குரிய வழிகளைக் கண்டுபிடிக்காது அவற்றை உரத்துச் சொல்லிக்கொண்டு மாத்திரம் இருந்தாலும், இந்தக் கூட்டங்கள் பல கெடுதிகளுக்கு மூலகாரணமாயிருக்கும். அவ்விதமின்றி, உங்கள் மஹாநாடு பன்முறையும் செய்திருப்பதுபோல், மற்றெல்லா இந்திய சமூகத்தாரின் உதவியையும் ஒற்றுமையையும் நாடி, உங்கள் சங்கம் தேசிய அமைப்பின் ஓர் பகுதியென விளக்கினீர்களானால், தேசிய முன்னேற்றத்திற்கு ஒத்ததும் உங்கள் சமூகத்திற்கு விசேஷமாகப் பொருந்தியதுமான உரிமைகளையும் கொள்கைகளையும் உங்கள் கூட்ட நடவடிக்கைகளில் காட்டினீர்களானால், உங்கள் ஜாதிக்கு ஓர் இயற்கை லக்ஷணம் உண்டென்றும் அதைச் சிதறவிடாது பாதுகாக்க விரும்புகிறீர்களென்றும் காட்டி, உங்கள் விசேஷத் திறமையைப் பரந்த இந்திய நோக்கத்திற்கு உட்படுத்தி அபிவிர்த்தி செய்ய முயல்வது உங்கள் நோக்கமானால் நீங்கள் உங்களது ஜாதியை முன்னுக்குக் கொண்டுவருவதுடன் தேசத்தையும் பலப்படுத்திச் சிறப்பித்தவராவீர்கள். சம உரிமையுடன் பல்வேறு துறைகளில் இறங்கி உழைத்துவரும் நாமெல்லோரும் சகோதரர்கள்தான் என்ற உண்மையை உணர்ந்து தங்கள் தங்களுக்குரிய மரியாதையுடன் சரியாக நடத்தப்படவேண்டுமென ஒவ்வொரு சமூகத்தாரும் வற்புறுத்த வேண்டுவது நியாயமாயிருத்தலுந் தவிர மிக அவசியமானது மாகும். உலகானுபவத்தை கவனித்தால் சமூக வாழ்க்கையில் தகுதியான அந்தஸ்து அடைவதற்குரிய முயற்சி, பிற சமூகத்தாரின் நல்லெண்ணத்தையும் உதவியையும் கவர்ச்சி செய்யக்கூடிய உங்களது குணத்தையும் செய்கைகளையுங் கண்டு அவர்கள் தாமாகவே உங்களை மதிக்கத்தக்க முறையில் செய்யப்படவேண்டும். சரீர பலவந்தத்தினாலேனும் மனோபலவந்தத்தினாலேனும் எந்த சுதந்திரங்களையும் உரிமைகளையும் வற்புறுத்தி இறுதியில் சித்தி பெறமுடியாது. அத்தகைய ஒவ்வொரு வெற்றியும் சன்மார்க்கத்தாலேயே உண்டாகவேண்டும்; சரித்திரத்தி

லும் அவ்வாறே இருக்கிறது. இவ்வாறு நோக்குங்கால், சில காலத்திற்குமுன் உங்கள் ஜாதியிலும் பிறஜாதிகளிலுமுள்ள சில அறியாத ஜனங்கள் சமாதானமற்ற ஆடம்பரமான வழிகளில் தங்களது அந்தஸ்தை நிலை நாட்ட முயன்றது யாவரும் வருந்தத்தக்கது. க்ஷத்திரியத் தன்மைக்குத் தக்கவாறு நடப்பது அவசியமென்றபோதிலும் யுத்த வீரர்களாக் ஜீவிப்பதிலும் சமூகவாழ்கையில் யுத்த குலத்திற்குரிய வீரோபசாரம் காட்டுவதிலும் அதை விளங்கச் செய்தால், அத்தன்மையும் அதற்குரிய சுதந்திரங்களும் மிக எளிதில் ஒப்புக்கொள்ளப்படுமென்பதை நீங்கள் அங்கீகரிப்பீர்கள்.

தேச பாதுகாப்பில் இந்தியா சுயமரியாதைக்குத் தகுந்ததோர் பங்கெடுக்க இயலும் வரையில் நம்நாடு பூர்த்தியான தேசியம் அடைய முடியாதென்பது நம்மெல்லோருடைய அபிப்பிராயம். சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள உங்கள் குலத்தவரிடமும் இதர சமுகத்தார்களிடமும் நிலைகொண்டுள்ள வீரத்தன்மை வீணாகப் போகிறதென்பது எனது அபிப்பிராயம். உங்களைப்போன்ற ஜாதியினர் பயனற்ற ஜாதிச்சண்டையில் வாழ்நாளை வீணாகக் கழிக்காது, பிற்கால இந்திய ராணுவ அமைப்பில் தகுந்தவாறு உழைப்பதைக்கண்டு யார்தான் இன்புறமாட்டார்கள்.

நாடார்களின் முற்கால சரித்திரமும் ஐதிகமும் எவ்வாறிருந்தபோதிலும், உங்கள் சமுகத்தினர் தற்போது பலவிதமான வியாபாரத்திலும் கைத்தொழிலும் அதிமுக்கியமாக ஈடுபட்டுள்ளார்கள். சில இடங்களில் நீங்கள் பொதுஜன சம்மதத்தின்பேரில் வரிகள் விதித்து உங்களுக்குள் பொது நன்மைக்கான பல சமுதாய நிதிகள் ஏற்படுத்தி, அவற்றைக் குடிக்கும் தண்ணீர் வசதிகள் செய்தல் கோவில்களில் பூஜை நடத்தல் பள்ளிக்கூடங்கள் நிர்வகித்தல் இவைகள் போன்ற காரியங்களில் செலவுசெய்து வருதல் உங்கள் சமுக வாழ்க்கையில் மிகக் கவனிக்கத் தக்கது. நான் மேலே கூறிய உங்களது ஒன்றுபட்ட வாழ்க்கை நீங்கள் பிறருடைய அதிகாரத்தினின்றும் உதவியினின்றும் வெகுதூரம் விலகி நிற்பதற்குச் சாதகமாக இருந்து வருகிறது. உங்களது ஒழுங்குகளையும் சுயாட்சி முறையையும் விளக்குகாட்ட, திருநெல்வேலி கெஜட்டிலுள்ள பின்வரும் வாசகத்தைக் குறிப்பிடுகிறேன். "நாடார்கள் வசிக்கும் ஸ்தலங்களில் அநேகமாய் ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் ஆதிக்கத்திற்குட்பட்ட சொந்தக்கோவில்கள் உள. பெரும்பாலும் பிராமணரின் உதவியின்றி அவர்கள் தாங்களே தங்கள் கலியாணச் சடங்குகளை நடத்துகிறார்கள்." இதுவுமன்றி, இந்தியாவில் பல சமுகத்தினர்களும் மதத்துவேஷத்தைத் தொலைப்பதற்கு இன்னும் வழிகளைத் தேடிக்கொண்டிருக்குங்கால், நீங்கள் அவ்விஷத்தில் ஒருவாறு சித்தியடைந்திருக்கிறீர்கள். ஏனெனின், உங்கள் குலத்தில் கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவினவர்கள் தங்கள் இந்துசகோதரர்களுடன் ஐக்கியமாக வாழ்வதும், ஒரே குடும்பத்தில் சிலர் இந்துக்களாகவும் மற்றவர் கிறிஸ்தவர்களாகவுமிருப்பினும் யாதோரு பிரிவினையும் ஏற்படாதிருப்பதும் கவனிக்கத்தக்கவை. ஆதலின், முற்போக்குள்ளதும் விசேஷமாய் வியாபாரத்தில் ஈடுபட்டதுமான உங்கள் சமுகத்தார், தங்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யவும் அந்நிலைமையைப் பிறர் அங்கீகரிக்கவும் சலியா முயற்சிகள் அடிக்கடி செய்துவந்திருப்பது ஓர் ஆச்சரியமன்று.

உங்களை க்ஷத்திரிய வம்சத்தவர் எனச் சொல்வதினின்று உண்டான வாக்குவாதத்தைக் குறிப்பிடுவதற்கு இது இடமுமல்ல, காலமுமல்ல. ஆனால், ஜனசங்கைக் கணக்கு குறிப்பிடுகிறவாறு, உங்களது நிலைமையை ஸ்திரப்படுத்தும்பொருட்டு நீங்கள் நீடித்தகாலம் பிரயத்தனம் செய்து வந்திருக்கிறீர்கள். 1874-வது ஆண்டிலிருந்து உங்கள் ஜனசமூக நிலைமையை உயர்த்தும்பொருட்டு நீங்கள் செய்த முயற்சிகளையும், அதனால் மறவர்களுக்கும் உங்களுக்கும் உண்டான சில சச்சரவுகளையும் ஜாதி பேதங்களையும் எடுத்துக்காட்டுவது, துக்ககரமான பழைய விஷயங்களை ஞாபகமூட்டும்

நோக்கத்துடனன்று. பற்பல ஜாதியார் செய்துள்ள இத்தகைய முயற்சிகளைப்பற்றி சரியான அபிப்பிராயம் உடையவர்களா யிருப்பது அவசியமானதால், அவைகளிலிருந்து சில நீதிகளைக் கண்டுபிடிப்பதே எனது நோக்கம். நமது மதம் வெளித்தோற்றத்தில் அநேக நிர்ப்பந்தங்களும், பண்டைக்கால ஆசாரங்களும், கட்டுப்பாடுகளும் நிரம்பப் பெற்றிருந்தபோதிலும் உண்மையில் பலமுள்ளதாகவும் மாறுதல்களுக்கு இடங்கொடுக்கக் கூடியதாகவும் இருக்கிறது. நாட்டுக்கோட்டைச் செட்டிகளை விட்டு சில வைஷ்ணவ வகுப்பினர்களை மாத்திரம் எடுத்துக் கொண்டாலுங்கூட, மதாசார விஷயங்களில் அவர்களது முற்கால சரித்திரங்களும் தற்கால நிலைமையுமே இதைச் சந்தேகமற நிரூபிக்கின்றன. மத உணர்ச்சியும் அபிப்பிராயமும் மிகவும் சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றி வரையறுத்துப் பேசுவது எப்பொழுதும் கஷ்டமான காரியம். ஆனால், இந்து மதமும் இந்து நாகரிகமும் இத்தேசத்தின் ஜனசமூக மத அமைப்பில் நிலைபெற்றிருக்க வேண்டுமாயின், அவைகள் நவீன முறைகளுக்கு இடங்கொடுத்து அவைகளுக்கு ஒத்திருக்க வேண்டுமென்பதையும் அவசியமானால் அவைகளின் வெளித்தோற்றத்தைக் கவனியாது உட்கருத்தைக் கொள்ள வேண்டுமென்பதையும் இவ்வாக்குவாதங்களில் ஈடுபட்ட இருதரத்தாரும் முதன்முதலாக மனதிலிருத்த வேண்டும். ஏனெனின், இந்தியாவில் வசிக்கும் சகல சமுகத்தாரின் சகோதரத்வம் பேச்சளவிலிருக்கும் வரை ராஜீய சுதந்திரம் கிடைக்கப்பெறாது; இந்திய தேசம் தற்போதைய உலகத்திலுள்ள முற்போக்கடைந்த இதர தேசங்களுக்குச் சமமான ஓர் நாகரிகமடைந்த தேசமாகவும் கருதப்படாது. சீர்திருத்தம் செய்ய விரும்பும் ஒருவன் ஆத்திரத்துடன் அதிவேகமாகச் செல்லாது நிதானமாகச் சென்றால் வெகு சீக்கிரம் வெற்றியடையலாம். அவனுக்கு அநுகூலமாக வெளிக்குத் தோன்றாத சக்தியுள்ள பல உபகாரணங்க ளிருக்கின்றன. உலகப் போக்கும் கால மாறுபாட்டால் ஏற்படும் இன்றியமையாத மாறுதல்களும் அவனுக்கு வெல்லற்கரிய பக்கபலங்களாய் இருக்கின்றன. வாழ்க்கைச் சுதந்திரமும், தேசீய சுதந்திரமும் தற்கால நாகரீகத்தை அவசியம் பின்பற்றி வருகின்றன.

ஆகலின், தற்போது ஜனசமூக சமவுரிமை உங்களுக்குக் கொடுக்க சில சமூகத்தவர்களுக்கு மனமில்லா திருந்தபோதிலும், வெகு சீக்கிரம் உங்களது விடாமுயற்சியும், க்ருஷிகத்திலும் வியாபாரத்திலும் உங்களுக்குள்ள திறமையும் தென்னிந்திய சமூகத்தவர்களில் ஓர் உன்னத நிலைமையடையச் செய்யுமென்பதை நான் திரும்பவும் கூறுகிறேன். கிணறுகளின் உதவியால் தோட்ட விவசாயம் செய்வதில் நீங்கள் பெயர்பெற்ற நிலசுவான்தார்களாகிக் கொண்டிருப்பது யாவரு மறிந்த விஷயம். உங்களில் விருத்தியடைந்த அநேக நிலசுவான்தார்களும் வர்த்தகர்களும் இருக்கிறார்கள். தவிர திரவியம் தேடும்பொருட்டு அன்னிய இடங்களுக்குச் செல்லும் துணிவும் உங்களுக்கிருக்கிறது. உங்களவர்கள் இலங்கையில் நல்ல சம்பாத்தியம் செய்திருப்பதுந் தவிர மொரிஷியஸ் ஸ்ட்ரெயிட்ஸ் மடகாஸ்கர் போன்ற இடங்களுக்கு வெகுதூரம் பிரயாணம் செய்திருக்கிறார்களென்றும் தெரிகிறது. மேலும் பழங்கால பழக்க வழக்கங்களிலேயே அழுந்தி கிடக்கும் யஜாதியினரைப் போலன்றி, நீங்கள் ஆங்கிலக்கல்வியைக் கையாண்டிருக்கிறீர்கள். உங்களில் அநேகர் வர்த்தகசாலைகளிலும் அரசாங்க உத்தியோகங்களிலும் அமர்ந்திருக்கிறீர்களெனத் தெரிகிறது. இத்தொழில் முறைகளில் சேருதற்கு உங்களுக்கு வேண்டிய உதவி செய்வது அவசியமே. ஆனால், உங்களைப் போன்ற ஓர் யூகமுள்ள சமூகத்தார் தற்காலத்தில் அவசியம் செய்யவேண்டுவது உங்களிடம் இயற்கனவே அமைந்திருக்கும் கைத்தொழில் திறமையை மென்மேலும் விர்த்தி செய்வதே யென விரைவில் அறிவார்கள்.

உங்களது கல்வி முன்னேற்றம் சமீபத்தில் ஆரம்பித்தபோதிலும் வெகு விரைவாகவும் தளர்வின்றியும் சென்றிருக்கிறது. உங்களில் அநேக B. A. பட்டதாரிகளும் மதுரை, திரா

மனாதபுரம், திருநெல்வேலி, சென்னை இவ்விடங்களில் வேலை பார்த்துவரும் B. L. பட்டதாரிகளு மிருக்கிறார்களெனத் தெரிகிறது. ரெவினியூபோலீஸ் இலாகாக்களின் உயர்ந்த உத்தியோகங்களில் உங்களிலும் உங்கள் கிறிஸ்தவ சகோதரர்களிலும் அநேகரில்லாவிடினும் சிலரேனு மிருக்கிறார்கள். பெரும்பாலும் உங்கள் சொந்த முயற்சியாலேயே தென் ஜில்லாக்களில் ஆறு ஏழு ஹைஸ்கூல்கள் ஸ்தாபித்தனீர்கள். அவைகளிலொன்றை சீக்கிரத்தில் காலேஜாக்கி விசேஷித்த நோக்கத்துடன் நடத்திவருவீர்களென எதிர்பார்க்கப் படுகிறது.

தூத்துக்குடியில் ஓர் பேங்கும் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆனால், நாட்டுக்கோட்டைச் செட்டிகள் குல முன்னேற்றத்திற்காகவும் பொது நன்மைக்காகவும் ஒவ்வொரு குடும்பத்தின் வருவாயிலும் ஒரு பங்கைத் தனித்து ஒதுக்கிவைப்பதுபோல் நீங்களும் செய்தீர்களானால், பேங்கு மென்மேலும் செழித்தோங்குமென்பது திண்ணம். பேங்கின் வளர்ச்சியையும் ஸ்திரத்வதையும் உங்கள் சங்கம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு சமூகத்தவரும் விபசாய அபிவிர்த்திக்கும் வியாபார அபிவிர்த்திக்கும் பலமான அஸ்திவாரம் போட்டால்தான், இந்தியதேசம் முன்னேற முடியுமென்பதை நீங்கள் உணரவேண்டும். சிற்சில வேலைகளைமாத்திரம் செய்யக்கூடிய பேங்கைக் கவனிப்பதோடு, உங்களுக்குள் கூட்டுறவு உணர்ச்சியையும் கூட்டுறவுத் தொழில்களையும் பரப்பும்பொருட்டு இடைவிடாது ஊக்கத்துடன் முயற்சி செய்தல் வேண்டும். இதர தேசங்களில் கூட்டுறவு நாணயச்சங்கத்தைத் தவிர கூட்டுறவு வியாபாரமும் வெகுதூரம் முன்னேறி யிருக்கிறது. சொற்பமான இயற்கை சௌகரியங்களையுடைய சிறிய டென்மார்க்கு தேசத்தில் வசிப்பவர் கூட்டுறவு இயக்கத்தை விடாது பின்பற்றி வெற்றியடைவதற்குவேண்டிய முயற்சி செய்து, தங்களுக்கு இயற்கையாகவுள்ள பற்பல கஷ்டங்களையும் நிவர்த்தி செய்து யூரோப்பாவில் நல்ல ஸ்திதி யடைந்திருக்கிறார்கள்.

சரியான உபகரணங்களுடன் ஓர் வியாபாரக் கலாசாலை ஸ்தாபிப்பது நீங்கள் கவனிக்கவேண்டிய ஓர் முக்கியகாரியம். ஏனெனின், முக்கியமாக பரம்பரை வியாபாரத்திறமையிருந்துள்ள சமூகத்தவர்கள் சாதாரணக் கல்வியும் தொழிற்கல்வியும் கற்றுக்கொடுக்கும் அத்தகைய கலாசாலையைத் திறமையுடன் நடத்தலாமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். யாவரும் அறிந்திருக்கிறபடி, கருப்புக்கட்டி செய்தலும் விற்றலும் உங்கள் கைக்குள்ளாக இருப்பதால், சகல உபகரணங்களும் வாய்ந்த சர்க்கரைத் தொழிற்சாலைகளை நீங்கள் எளிதில் ஸ்தாபித்துப் பிரயோஜனம் அடையலாமென்பதையும் நான் குறிப்பிடுகிறேன்.

ஒவ்வொரு சமூகத்தாருக்கும் தேசத்தாருக்கும் ஒவ்வொரு தொழிலில் விசேஷயூகம் உண்டென்பதும், அத்திறமையை அறிந்து அதை எவ்வளவுதூரம் அபிவிர்த்தி செய்யமுடியுமோ அவ்வளவுதூரம் செய்தலே முன்னேற்றத்துக்குத்தகுந்த வழியென்பதும் சகலரும் அறிந்த விஷயம். இத்தேசத்தின் இதர பாகங்களைவிட விசேஷமாக விபசாயத்தையே கையாண்டுள்ள இத் தென்னிந்தியாவில் முன்னேற்றத்துக்குச் சிறந்ததும் பயன் தரத்தக்கதுமான வழிகள், நூதன முறைப்படி விபசாயத்தைச் செவ்வையாகச் செய்தலும் வீட்டுக் கைத்தொழில்களை விர்த்தி செய்வதுமே. நீங்கள் பருத்தி அதிகமாக விளையக்கூடிய நாட்டில் வாசஞ்செய்தும், நெசவுத் தொழிலைச்சரியாக அபிவிர்த்தி செய்யாதிருப்பது எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது. மேனாட்டுக் கைத்தொழிற்சாலைகளில் சுகாதாரமற்ற நெருக்கமான இடங்களில் திரளான ஜனங்கள் கூடி வியர்வையோடு கஷ்டமான வேலைகள் செய்வதாலுண்டாகும் சரீரக் கெடுதிகளையும் பழக்க வழக்கக் கெடுதிகளையும் நமது நாட்டிலும் வளரச் செய்வது சரியென்று தற்கால விஷயங்களை அறிந்தவர்கள் எண்ணமாட்டார்கள். இதை நோக்கின், நீர்ப்பாய்ச்சல் வசதிகளை அதிகப்படுத்தி, அந்நிய தேசத்தவர்களால் மெச்சப்பட்ட நமது ஜனங்களின் இயற்கையான விபசாயத்திறமை

யை அதன் மூலம் அபிவிர்த்தி செய்தால் பல பிரயோஜனங்கள் உண்டாகுமென நம்புகிறேன். தண்ணீர் மூலாதாரங்களின் உதவியால் மலிவான சக்தி உண்டாக்கி அதன்மூலம் எங்கும் பற்பல கிளைகளாகப் பரவி ஒன்றுசேர்ந்து நடைபெறக்கூடிய வீட்டுக் கைத்தொழில்களை இத்தேசத்தில் ஸ்தாபிப்பது நீங்கள் செய்யத்தக்க இன்னொரு முயற்சியாகும். நம் நாட்டாரால் நன்கு மதிக்கப்பெற்ற கிராம வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படாமல் நமக்குத் தேவையான பொருள்கள் உற்பத்தி செய்யும் வழி இதுவேயாகும்.

தற்கால ராஜீயக் கிளர்ச்சிகளை குறித்து இவ்விடத்தில் பொதுவாக ஆராய்தலும் வருங்கால ராஜீய நிலைமையைப்பற்றிச் சிந்திக்கவும் பொருத்தமற்றதாகாது. இங்குக்கூடியுள்ள உங்களில் பலருடைய மனதை உறுத்திக் கொண்டிருக்கும் விஷயங்களில் சிலவற்றைப்பற்றி யோசிக்காதிருக்க முடியாது. இரட்டையாட்சி முறையின் நன்மைகளைப்பற்றியும் தீமைகளைப் பற்றியும் விஸ்தரித்துப் பேசுவது என் நோக்கமன்று. அது தற்காலத்திற்காக ஏற்படுத்தப்பட்டமையால், அதை அம்முறையில்தான் கவனித்தல் வேண்டும். நாம் கோரிய இலக்கின் மீது முழுக்கவனத்தையும் செலுத்தி, நமக்குப் பயனளிக்கக்கூடிய எல்லாவிதக் கருவிகளையும் உதவியாகக்கொண்டு. திடமாக முன்னேறிச் செல்வதே அறிவாளிகளின்செயலாகும். நமது தேசம் பூரண சுதந்திரம் அடையவேண்டுமென ஆவல் கொள்வதில் நான் எவருக்கும் தாழ்ந்தவனல்ல. அச்சுதந்திரம், பிரஜாபத்தியக் கொள்கைகளைப் பரப்புதற்கும், ஒவ்வொரு நாட்டிலும் ஜனங்கள் தங்களைத் தாங்களே ஆளும் குடியரசு ஏற்படுத்துதற்கும், ஒருவராலும் தடுக்க முடியாதபடி ஊக்கத்துடன் வேலை செய்து வருகிறது. இதோடு நிற்காமல், ஓர் முக்கியமான சந்தர்ப்பத்தில் லார்டு மார்லி கூறியவாறு, அந்நிய அரசாட்சியில் மிகவும் கஷ்டப்படத்தக்க ஜனங்கள் தேச அரசாங்க முறையில் சரியான பங்கெடுக்கும்வரையும் ஓர்நாட்டின் அரசாங்கம் செவ்வனே நடைபெறமாட்டாதெனவும் சொல்லுவேன். தேசிய வாழ்க்கையில் ஒவ்வொரு சமூகத்தவரும் சமவுரிமை யுள்ளவர்களாய் வெவ்வேறு கருமங்கள் செய்யவேண்டியதிருக்கிறதென்றும், ஒருவகுப்பாருக்கு இன்னொருவகுப்பாரை அதிகாரத்தோரணையில் நடத்த உரிமை இல்லையென்றும் எங்கும் பரவியுள்ள உணர்ச்சியின் அறிகுறிகளை ஆதரிக்கவேண்டுமேயன்றி இகழக்கூடாது. இத்தேசத்திலுள்ள ஐரோப்பியர்கள் வியாபாரத்திலும் அரசாங்க நிர்வாகத்திலும் நம்முடன் சேர்ந்து உழைக்கவேண்டுமேயன்றி நமது எஜமானர்கள் ஆகலாகாதென நாம் சொல்வதைப்போலவும், காங்கிரஸும் முஸ்லீம் சங்கமும் ஆதியில் பலவழிகளில் இக் கொள்கையைப் பிரஸ்தாபித்ததைப் போலவும், தற்சமயம் காலமாறுபாட்டால் தாழ்மையாக நடத்தப்பட்ட குலத்தவர்கள் உயர்ந்த ஜாதிகளுக்குமுன் தங்கள் நிலைமையை நியாயமுறையில் ஸ்திரப்படுத்த முயல்கிறார்களென்பதை நாம் மறைக்கலாகாது. இப்போராட்டம் அவசியம் எவ்விதத்திலும் உண்டாவதோடு, ஆரம்பகாலத்தில் சிறிது பகையும் மனத்தாங்கலுங்கூட ஏற்படும். ஓர் பிரெஞ்சு தேசப்பழமொழி கூறுகிறவாறு, "முட்டையை உடைக்காமல் முட்டைப் பணிகாரம் செய்ய முடியாது." சுதந்திரக்கோட்டை உடைபடும்போது நீங்கள் சிறிது உக்கிரம் காட்டாதிருக்க முடியாது. ஆழ்ந்து யோசிப்பவர்கள் இவைகளெல்லாம் உலக விவகாரங்களுக்கு அவசியமானவையென அறிதல்வேண்டும்.

ஆனாலும் நீக்கவேண்டிய இரண்டு அபாயங்களிருக்கின்றன. ஒவ்வொரு சமூகத்தினரும் முன்னிலை யடைந்தபின், தாங்கள் விசேஷ சுதந்திரமுள்ள ஜாதியினரென நினைத்துப் பெருமையுடன் விலகி நின்று, பிற்போக்குள்ள இதர சமூகத்தினரைவிடத் தங்களை உயர்வாகப் பாவித்து விடுவது சகஜம். உதாரணமாக, கொடூரமாக நடத்திவந்த ஜனங்களுடன் விடாது போராடிப் பின் நன்னிலைமையடைந்த வகுப்பார்கள், தங்களைப்போல முன்னேற விரும்பும் பின்னடைந்த சில வகுப்பினர்கள்

செய்யும் பிரயத்தனங்களை வெறுக்கிறார்கள். இரண்டாவது அபாயமாவது, வெவ்வேறு வகுப்பினர்கள் தங்களுக்கு அப்போதைக்கப்போது வேண்டிய அற்ப சொற்ப காரியங்களை நிறைவேற்றுவதற்கும் தனித்த பிரயோஜனங்கள் அடைவதற்கும் செய்யும் முயற்சியில் எல்லாவற்றிற்கும் மேலாக தேசமிருக்கிறதென்பதையும், அதனுரிமைகளை நிலைநாட்டி உலகத்தில் அதற்குரிய நிலைமையை ஸ்தாபிக்கவேண்டுமென்பதையும் தேச உரிமைகள் வகுப்பு உரிமைகளைவிட அதிமுக்கியமானவையென்பதையும் மறந்து விடுவதே. இத்தீங்கின் அறிகுறிகளை இம்மாகாணத்தில் மாத்திரமின்றி இத்தேசமெங்கும் பார்க்கலாம்.

இறுதியாக, நல்வழியில் செலுத்தப்பெற்ற உற்சாகத்தாலுண்டாகும் தைரியத்திற்கும் வெறும் பேச்சுக்கும் மிகப் பேதமுண்டென்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். ஆனால் அவ்வெச்சரிக்கை உங்களுக்கு அவசியமில்லை. முன்பாகவே தீரயோசித்துச் சரியான வழியில் முயற்சிக்காது, பரஸ்பர அவநம்பிக்கையுண்டாக்குவதிலும் பொய்யான பயமுறுத்தல் செய்வதிலுமே காலம் கழிப்பதால், நம்மைச் சேர்ந்தவர்களுக்கு யாதொரு உதவியும் உண்டாகாமல் நமது விரோதிகளுக்கே அது அநுகூலமாய் முடியும்.

ஒவ்வொரு சமூகத்திற்கும் அதனதன் குறைகளுண்டு. தேசமுழுவதும் சேர்ந்து முடிக்கவேண்டிய ஒரு பெரிய காரியமும் உளது. ஆனால், ஸார்டெல்லோ என்ற செய்யுளில் ப்ரௌனிங் என்னும் ஆங்கிலக் கவி கூறியுள்ளவாறு "இக்காரியங்கள் நினைத்தமாத்திரத்தில் திடீரென எளிதில் கைக்கெட்டக்கூடியவையன்று வெளிக்குத்தோன்றாத பிரமாண்டமான சலியா உழைப்பினாலேயே வரக்கூடியவை."

சுபம்! சுபம்! சுபம்!

மதுரை, நாடார் மஹாஜன சங்கம், சாஸ்வத அக்கிராசனர்,

ஸ்ரீமான், வெ. பாலகுருசாமி நாடார்

அவர்களின் உபந்நியாசம்.

9--6—25

எனதன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

நம்குல மாநாட்டின்முன் என்னை மறுபடியும் பேசும்படி அழைத்ததற்காக நான் என் முழுமனதோடும் உங்களெல்லோருக்கும் வந்தனமளிக்கின்றேன். நம்மரபினரின் முன்னேற்றவிஷயமாய் நாம் இதுவரையில் செய்திருக்கும் காரியங்களையும் இனி செய்யவேண்டிய காரியங்களையும் எடுத்துரைக்கப் புகுங்கால் என் மனம் ஒருவாறு களிப்பும், என் திறமைக் குறைவை நினைத்துக் கலக்கமும் உறுகின்றது. சென்ற வருஷம் நடந்த மகாநாட்டிற்குப் பிறகு நாம் ஒருங்குசேர்ந்து ஊக்கத்துடன் உழைப்பதிலும், பிரசார வேலையிலும் திருப்திகரமான வேலை செய்திருக்கிறோம். நடந்த வருஷத்தில் சாதாரண அங்கத்தினர்களும், விசேஷ அங்கத்தினர்களும் அநேகர் புதிதாய் சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். பல கிளைச் சங்கங்களும், விசேஷ சங்கங்களும் ஸ்தாபனமாயிருக்கின்றன. சங்கவாரக் கொண்டாட்டம் பல இடங்களில் உற்சாகத்தோடு நடந்தேறியது. சில பாடசாலைகளுக்குப் பண உபகாரமும், அநேக தகுதியுடைய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. அநேக இடங்களில் பத்திரிகை வாசகசாலைகளும், புத்தகசாலைகளும் புதிதாய் நியமனமாயிருப்பதும், இப்பேர்ப்பட்டவைகள் இன்னும் நியமனமாவதற்கு ஏற்பாடு நடப்பதும் மன மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. அநேக முக்கிய இடங்களில் நாடார்குல வாலிபர் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. வடகன்குளம் முதலிய சில இடங்களில் நாடார்குல மாதர்கள் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று

உங்களுக்கு உற்சாகத்தோடு சொல்லுகிறேன். தற்காலத்தில் நம் குலமாதர்களின் பெண்கல்வி விஷய முன்னேற்ற காரியங்களை நினைக்கும்போது நம்மரபு முன்னேற்ற விஷயமாய் நம் மாதர்கள் ஊக்கத்தோடு உழைக்க முன்வருவது ஆச்சரியமல்ல. நமது இந்தியாவின் ஜனங்கள் மேம்பாடடையும் விஷயத்தில் நம் மாதர்கள் செய்யப்போகும் வேலைக்கு இதுதான் ஆரம்பம். இம்மகா நாட்டின் காரியதரிசிகளும் சுற்றுப் பிரயாணம் வந்து விஜாரணை செய்யும் உத்தியோகஸ்தர்களும் தென்னிந்தியாவிலுள்ள அநேக இடங்களை மாத்திரம் சுற்றுப்பிரயாணம் செய்து விஜாரணை செய்வதோடு மாத்திரமல்ல, பர்மா, கொழும்பு முதலிய தூரதேசங்களுக்குப் போய் அங்கங்கே செய்திருக்கும் வேலைகள் மெச்சத்தகுந்தது. இவ்வித முயற்சியால் நம்மரபினரின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் அநேக சங்கங்கள் அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன் பினங்கு, சிங்கப்பூர் முதலிய உலகத்தின் தூரமான பாகங்களிலிருக்கும் நம்மவர்களின் கவனம், நம்குலத்தவரின் க்ஷேம விஷயத்தில் செலுத்தப்பட சாதகமேற்பட்டிருக்கிறது. பிறரால் நம்மரபினருக்கு உண்டாகும் தீமைகள் ஒருவாறிருக்க, சில இடங்களில் நம்மவர்களுக்குள்ளேயே கக்ஷிப்பிரதி கக்ஷிகளும், விரோதங்களும் இருப்பது விசனகரமானது. இவ்வித விரோதங்களினால் நம் குலத்தின் பெருமையும், செல்வாக்கும் குறைவதுடன் பிறரால் ஏற்படும் தீமையிலிருந்து வெற்றியுடன் விடுவிக்கப்பட்டு முன்னேற்றமடைய ஏதுவாயிருக்கும் திரண்ட பொருள் கைக்கெட்டாமல் விரயப்படுகிறது.

ஒற்றுமை.

நம்மவர் சிலருக்குள் ஏற்படும் ஒற்றுமைக் குறைவால நம்மரபுக்கு உண்டாகும் கஷ்டநஷ்டங்களைப் பற்றி யோசித்துப் பாருங்கள். ஒற்றுமையின்மையும் விரோதமும் எப்போதும் பலவீனத்தைத்தான் உண்டுபண்ணும். விரோதத்தால் பிரிவுபட்டிருக்கும் எந்த மரபும் சீக்கிரத்தில் க்ஷீணதசையடையும். ஆனால் ஒற்றுமைதான் பலம். இவ்வித மகாநாடு, சங்கங்கள் முதலிய ஒருங்குசேர்ந்து உழைக்கும் ஸ்தாபனங்களின் உதவியால் நாடார் மரபினருள் அந்நியோந்நியத்தையும், ஒற்றுமையையும் விர்த்திசெய்ய முயலுகையில், சில இடங்களில் நம் நன்மையை விரும்பாத பிறர் நமக்குள் பிரிவை உண்டுபண்ணி தங்கள் கெட்ட காரியங்களில் சித்தியடைவதைப் பார்க்கும்போது மனம் வருந்துகிறது. இவ்வித விரோதத்திற்கும், ஒற்றுமையின்மைக்கும் காரணமாயிருக்கும் எவ்வித சந்தர்ப்பத்தையும் அகற்றுவதே இம்மகாஜன சங்கத்தின் முதல் கோரிக்கையாய் இருக்க வேண்டும். காலாகாலத்தில் சங்கங்களைக் கூட்டிவைக்கவும், சர்கார் உத்தியோகஸ்தர்களின் கொடுமையிலிருந்தும், கெட்ட சிந்தனையுடைய பிறமரபினரின் தீங்குகளிலிருந்தும் நம்மரபினரை விடுவிக்க ஒருமத்திய ஸ்தாபனத்தை நாம் முன்னமே ஸ்தாபித்திருக்கிறோம். நம்மவரொருவருக்கு அநீதியோ, கொடுமையோ சம்பவித்தது என்று கேட்டமாத்திரத்தில் தக்க உதவி செய்வதற்காக இம்மகாஜன சங்கத்து உத்தியோகஸ்தர்களுக்கு நாம் நன்றிசெலுத்துகிறோம். செய்த்தலை, கல்லல்பட்டி, ராமநாதபுரம், பணகுடி, மாங்குடி, மீனாக்ஷிபுரம் முதலிய இடங்களிலுள்ள நாடார்களுக்கு வெகு நல்ல உதவி செய்யப்பட்டிருக்கிறதென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன். விரோதிகளால் நம்மவர்களுக்கு ஏற்படும் தீமைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் விடுவிக்க நம் தலைவர்கள் சுயநலம் கருதாமல் உழைத்து வருவதையும் இம்மகாஜன சங்கத்தால் நம்மரபினருக்கு ஏற்பட்டிருக்கும் சௌகரியங்களையும் சுதந்தரங்களையும் எடுத்துரைக்க வேண்டும். நம் தலைவர்கள் மேலே சொன்ன துன்பநிவர்த்தி விஷயமாய் செய்து வரும் வேலையை நான் மிகவும் பாராட்டுவதோடு கூட நம்மவர்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லாமல் விரோதம் பாராட்டுவது, வெளி விரோதிகளின் துர்ச்செய்கைகளைவிட நமது முன்னேற்றத்திற்கு கெடுதலை உண்டுபண்ணும் என்பதை வற்புறுத்திச்சொல்லுகிறேன். வெளி விரோதத்தால் நமக்குள் குல அபிமானம் அதிகப்படும். ஆனால் உள்

விரோதங்களோ அரிபிளவையைப் போல நம் சக்திகள் எல்லாவற்றையும் சிதைத்து விடும். நம்மவர்க்குள்ளேயே விரோதித்து கக்ஷி பிரதி கக்ஷி உண்டு பண்ணுவது பிறமரபினரோடு போடும் சண்டை சச்சரவுகளை விட அதிகமான துன்பத்தையும் நஷ்டத்தையும் உண்டு பண்ணும். தலைவர்களே! நம்மவர்கள் நலத்தை எப்போதும்போல் கவனித்துவாருங்கள். நம்மவர்களுக்குள் எவ்விடத்திலாவது சச்சரவு ஏற்படும் என்று தெரிந்தமாத்திரத்தில் வெகு துரிதமாய் அவ்விடம் சென்று ஆரம்பத்திலேயே விரோதத்தை அகற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; உண்மையில் இவ் வேலையானது, பிற விரோதிகளின் அநீதியிலிருந்து நம் சகோதரர்களை விடுவிப்பதைவிட மிகவும் சிரமமானதுதான். நம்மரபின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இது அதி முக்கியமானதும். அன்பு நிறைந்ததுமான வேலை. இது ஆசிர்வதிக்கப்பட்ட வேலை. 'சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரரென்று அழைக்கப்படுவார்கள்'. இவ்வித வேலையை திருப்திகரமாய்ச் செய்ய, நல்ல எண்ணமும், சமாதான சிந்தனையுமுடைய நம்மவர்கள் நம் தலைவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். அப்படி யாவரும் ஒத்தாசை செய்தால்தான் கக்ஷிகள் பலப்பட்டு, விரோதம் அதிகரிக்குமுன் நம் தலைவர்கள் முன்னதாக செய்தி தெரிந்து தக்க ஏற்பாடு செய்ய சாத்தியமுடையவர்களாயிருப்பார்கள். "தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கும் எந்த ராஜ்யமும் நிலைநிற்காது" என்று சொல்லப்பட்டிருப்பதற்கிணங்க நாம் வசிக்கும் எல்லா முக்கிய இடங்களிலும் நம்மவர்கள் ஒரு மனதோடு ஒன்றுசேர்ந்து நிற்காவிட்டால் நம்மரபு சங்கங்களும், கூட்டங்களும் பயனற்ற சாதனங்களே யாகும்.

மேலே சொல்லப்பட்டவைகளுக் கிணங்கவும், அவ்விஷயத்தை சாதிக்கவும் நம் நாடார் மரபினர் வசித்து வரும் முக்கிய இடங்களிலெல்லாம் நம்மவருக்குள் பஞ்சாயத்துகள் ஏற்படுத்திக் கொள்ளும்படி மிகவும் வற்புறுத்திச் சொல்லுகிறேன். இப்பஞ்சாயத்துகள் அங்கங்கே ஏற்படும் சண்டை சச்சரவுகளை நேரில் விசாரித்து யாவருக்கும் திருப்திகரமாய் நியாயம் தீர்த்து சமாதானத்தை நிலைநிறுத்த ஏதுவுள்ளவைகளாய் இருக்கும். இந்த ஸ்தல பஞ்சாயத்துகள் தலைமை ஸ்தாபனத்தின் உதவியை தேவையுள்ள சமயத்தில் அடையலாம். இவ்வித பஞ்சாயத்தார்கள் சர்க்கார் நியாய ஸ்தலங்களை விட நேர்மையான நியாயம் தீர்க்க சக்தியுள்ளவர்களாய் இருப்பார்கள். இவ்வித தன்னடக்கமும், சுய ஆட்சியும் நாமே அப்பியாசிக்காவிட்டால் நாம் முன்னேற்றமடைந்த மரபினர் என்று சொல்லிக்கொள்வதற்கு என்ன நியாயம் இருக்கிறது? இன்னும் நம் பஞ்சாயத்தார்க்குள்ளேயே சமாதானமாய்த் தீர்த்துக் கொள்ளக்கூடிய விவகாரங்களைப் பிறர் முன்னாவது, சர்க்கார் நியாய ஸ்தலத்திற்காவது கொண்டுவருவதை நம்மவர்களில் யோக்கியமுள்ளவர்கள் அவமானமில்லாமல் செய்யலாமா? நமக்குள்ளேயே உண்டாகும் ஒற்றுமையின்மையும் அபிமானக்குறைவும் நம் கௌரவத்தை சிதைப்பதோடு சமூக வாழ்க்கையின் முன்னேற்றத்தையும், கல்வி, கைத்தொழில், பொருளாதார நிலை இவைகளின் அபிவிர்த்தியையும் தடைசெய்கிறது. நாம் தனிமையாயும் ஒன்றுசேர்ந்தும், வாழும் வாழ்க்கைக்கு ஒற்றுமையின்மை பலவீனத்தை மாத்திரமல்லாது க்ஷீணதசையையும் அடையச்செய்யுமென்பதை மறுபடியும் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

பொருளாதாரம்.

நம் மரபின் பொருளாதார நிலைக்கும், இப்பொருளைக்கொண்டு நடைபெற்று வரும் மற்ற கைங்கரியங்களுக்கும் நமக்குள் ஏற்படும் ஒற்றுமைக் குறைவு விளைவிக்கும் கஷ்ட நஷ்டங்களை நினைத்துக் கலக்கமுறுகிறேன். நம் சொந்த காரியங்களைச் சீர்திருத்தி அவைகளைச் சரிவர நடத்த நம்மவருள் சிலர் சர்க்கார் சட்டசபை உதவியை தேடுவது விசனகரமானது. சர்க்கார் சட்டதிட்டங்களை விட தன்னடக்கமாயும் சுயநலம் கருதாமலும் செய்யும் காரியங்கள் தான் ஜனங்களை தேசிய வாழ்க்கையில் மேம்

பாடடையச் செய்யும். எங்கும் ஜனங்கள் சுயராஜ்ஜியம் வேண்டுமென்று கேட்கும்போது முன்னேற்றமடைந்த செல்வாக்குள்ள ஒரு மரபு தன் சொந்த பொருளாதார நிலை சம்பந்தமாய் வெளியிலுள்ளவர்களின் சட்டதிட்டங்களையும், அதிகாரத்தையும் தேடுவது உசிதமான காரியமல்ல. ஒருகாலத்தில் தமிழ்நாட்டை ஆண்டோமென்று சொல்லும் நாம்மரபின் பொருளாதார நடவடிக்கைகளின் ஊழலைப் பிறருக்குத் தெரிவித்துக் கொள்வது நம் கௌரவத்தை நாமே சிதைத்துக் கொள்வதாய் முடியும். சுட்டிச் சொல்வோமானால் நம்மரபின் பலவித பொது சொத்துகள் சரிவர பரிபாலிக்கப்படாமல் துர்விநியோகமாகின்றன. சில இடங்களில் நம்பேட்டை வருமானம் சரிவர வசூலிக்கப்படாமலும் வசூலிக்கப்பட்டபோதிலும் திட்டமான கணக்குகள் நம் நாட்டாண்மைக்காரர்களுக்குக் காட்டப்படாமலும் கௌரவமும், சிக்கனமுமில்லாதவர்களால் அபகரிக்கப்பட்டு துர்விநியோகமாவதை நம் தலைவர்களில் பலர் கூக்குரலிட்டிருக்கிறார்கள். தொன்றுதொட்டு ஏற்பட்டிருக்கும் இப்பொது சொத்துக்களையும் வருமானங்களையும் சீர் செய்யும் வழியில் ஏற்படும் தடைகளைப் பொருட்படுத்தக் கூடாது. நம்முன்னோர்கள் இச்சொத்துக்களை மரபு, மதம், சமுதாய அபிவிர்த்தி சம்பந்தமாய் சரியான வழியில் செலவிட்டு வந்தார்கள். இம்மகாஜன சபை நம்மரபுக்குச் சொந்தமான எல்லா பேட்டை வரவு செலவு கணக்குகளைக் காலாகாலத்தில் சரிபார்த்து மகாஜன சபையின் ஒரு சிறு சங்கத்திற்கு தெரிவிப்பதுடன், துர்விநியோகமோ, கணக்குக் கொடுக்காமலோ இருப்பவர்களை இச்சபையின் முன் பகிரங்கமாய் வெளியிடவேண்டும். சுருக்கிச் சொல்ல வேண்டுமானால் நம்மரபின் பொது சொத்துக்களைச் சரிவர பரிபாலனம் செய்ய, இந்துமத பரிபாலன சட்டத்தைப்போல் இந்த மகாநாடே சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவைகளை அமுலுக்கு ஏன் கொண்டுவரக் கூடாது? மகமை வசூல் விரிவாகவும், ஜாதி அபிமானம், ஜாதி முன்னேற்றம் இவைகளை சார்ந்திருப்பதாலும் இவ்விஷயத்தில் நான் அவ்வளவு சுலபமாய்ப் பேச முடியாது. இவ்விஷயத்தை ஜில்லா அல்லது தாலூக்கா சங்கங்கள் கவலையெடுத்து வசூலை எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகரித்து காலாகாலத்தில் மத்திய சபைக்கு வரவு செலவு கணக்கு கொடுக்க வேண்டும்.

கடைசியாய்த் தலைக்கட்டு வரியைப்பற்றிச் சொல்லுகிறேன். இவ்வரியை நம் மரபைச் சேர்ந்த யாவரிடத்திலும் வசூலிக்கவேண்டுமென்று இம்மகாஜன சபையில் தீர்மானமாயிருந்தும், செல்வத்தில் சிறந்த வெகு முக்கிய இடங்களில் இவ்வரி வசூலிக்கப்படாமலிருப்பது யாவருக்கும் நன்கு தெரிந்த விஷயம். நான் வேண்டுமென்றே இடங்களின் பெயரை சொல்லாமலிருக்கிறேன். ஏனெனில் இடங்களின் பெயரைச் சொல்வதால் அவ்விடமுள்ளவர்கள் தங்களை அவமானப் படுத்தினதாய் நினைப்பார்கள். இவ்வித ஊழல்களை கூடிய சீக்கிரம் அகற்றவேண்டுமென்று இதற்குக் காரணமாயுள்ளவர்களின் மேலான குணங்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன்.

நம் பொது சொத்துக்களின் சீர்கேடால், நாம் கல்வி கைத்தொழில் முதலிய வழியில் ஒன்றுசேர்ந்து ஊக்கத்துடன் உழைப்பது தடைபடுகிறது. கட்டாயக் கல்வி விஷயம் எங்கும் யோசிக்கப்படுகிறது. எந்த வகுப்பினர் இம்முக்கிய சமுதாய வேலையினிமித்தம் தங்களுக்குத் தானே வரி விதித்துக்கொள்ளும்படி முன்னேற்றமடைந்திருக்கிறார்களோ அவர்கள் சித்தியடைவார்கள். நம்மரபின் பொது சொத்துக்களும் ஒருவிதத்தில் நாமே விதித்துக்கொண்ட வரிதான். இப்போது சொத்துக்களை சீர்செய்தால் நம் மரபும் கட்டாயக் கல்வி விஷயத்தில் சித்தியடையலாம். மகமை வருமானத்திலிருந்து முதல் முதல் செலவு நம்மவரின் கல்வி அபிவிர்த்திக்காக செய்யவேண்டும். மேலே சொன்ன விதமாய் நம் மகமை வருமானத்தை ஒழுங்கு செய்தால் நம்மரபினர் கூடிவாழும் இடங்களிலெல்லாம் ஒவ்வொரு

முதன்மையான பள்ளிக்கூடம் ஸ்தாபனமாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வித பல இடங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு உயர்தர பாடசாலையை ஸ்தாபித்து நடத்திவரலாம், ஒழுங்கான பொருளாதார நிலையைக்கொண்டு நாம் இன்னும் மேலான கல்வி ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கலாமென்பதை நான் சொல்லாமலே நீங்கள் அறிந்துகொள்ளலாம். நாமே இவ்விதம் செய்வோமானால் உபகாரச் சம்பளம், பத்திரிகை வாசகசாலைகள், புத்தகசாலைகள், நந்தவனங்கள், மாணவர் போஜனசாலைகள் முதலியவைகள் ஸ்தாபிப்பதற்கு சர்க்கார் தாராளமாய் பொருளுதவி செய்வார்களென்பதற்கு ஐயமில்லை. இவ்வித சாதனங்கள் தற்கால நிலைமைக்கு இன்றியமையாதவைகள்.

தென்னிந்திய முழுவதும் நம்மவர்கள் முக்கியமான கைத்தொழில்களும் வியாபாரங்களும் நடத்தி வருவது யாவருக்கும் தெரிந்த விஷயம். நம்மில் சிலர் எல்லாவித கைத்தொழில் விஷயத்திலும் முயற்சியுள்ள உழைப்பாளிகளென்றும், உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரங்களில் தேர்ச்சியடைந்தவர்களென்றும், உள்நாட்டு அயல்நாட்டு வியாபாரங்களை லாபகரமாய் நடத்தும் முதலாளிகளென்றும் பெரும் பேரெடுத்திருந்தும், பழையமுறைகளை விட்டு ஒன்று சேர்ந்து பெரும்படியான வழியிலும் நூதன லாபகரமான முறைகளைக் கையாடித் தற்காலக் கோட்பாடுகளுக் கிணங்க நாம் முன்னேற்றமடையாமலிருக்கிறோம். நம்மவர்களில் சிலர் நடத்திவரும் கருப்பட்டி செய்யும் தொழிலை உதாரணமாய் எடுத்துக் கொள்ளுவோம். சர்க்கரையையும் இன்னும் அதிற்சேர்ந்திருக்கும் மற்ற வஸ்துக்களையும் சீக்கிரமாயும், சுலபமாயும் பிரித்து சுத்திசெய்யும் லாபகரமான முறைகளைக் கையாட நாம் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். இவ்விதக் கைத்தொழில் பார்சி ஜாதியார் கையிலிருக்குமானால் உள்நாட்டு அயல்நாட்டு நிபுணர்களின் உதவியைக் கொண்டு அக்கைத்தொழிலை அவர்கள் உலகப் பிரசித்தி அடையும்படி செய்திருக்க மாட்டார்களா? நம் எவ்வளவோ சாதனங்களிருந்தும் வேலை சிக்கனம் செய்யும் ஆயுதங்களையாவது உயர்தரச் சரக்குகளை செய்யும் முறைகளையாவது நாம் கையாடுகிறோமா? அப்படி நூதன முறைகளைக் கையாடுவதால் நடுவிலுள்ளவர்கள் அடையும் ஆதாயத்தை கடின தொழில் செய்கிறவர்களே அடைய வழி உண்டாகாதா? நமக்கு இவ்விஷயத்தில் நிபுணர்கள் கிடைப்பது அசாத்தியமாயிருந்தால் நம் வாலிபர்களை அயல் நாடுகளுக்கு அனுப்பி அங்கே நூதன முறைகளைக் கற்கச்செய்து, அப்படிக் கற்று வந்த அறிவை நம்மவர்களின் கைத்தொழிலை லாபகரமான முறையில் நடத்த உதவும்படி செய்யவேண்டும். இப்போதே ஒரு சிறு சங்கத்தை ஏற்படுத்தி நம்மவர்களின் பெரும்பான்மையோரின் கைத்தொழிலை அபிவிர்த்தி செய்ய அன்னிய தேசத்து நிபுணர்களின் யோசனையைக் கேட்கும்படியாவது செய்யக்கூடாதா? நம்மவர் செய்துவரும் மற்றக் கைத்தொழில்களையும் இவ்விதம் அபிவிர்த்தி செய்ய முயலவேண்டும்.

எந்தக் கைத்தொழிலின் முன்னேற்றமும் அதிகமான மூலதனத்தைச் சார்ந்திருக்கிறது. நம்மரபின் பொதுச் சொத்துக்கள் சரிவர ஒன்று சேர்க்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வந்தால் நமக்கு வேண்டிய மூலதனங்களுக்குத் தக்க உதவியாயிருக்கும். அதிர்ஷ்ட வசத்தால் நாம் முன்னமே தூத்துக்குடியில் ஒரு மத்திய பொக்கிஷசாலை ஏற்படுத்தியிருக்கிறோம். அது தன் முழுப் பிரயோஜனத்தையும் அடைய நம்மவர்கள் வியாபாரஞ் செய்யும் முக்கிய இடங்களிலெல்லாம் ஒவ்வொரு கிளைப் பொக்கிஷசாலையை ஏற்படுத்த வேண்டும். கூட்டுறவு பொக்கிஷசாலை, கைத்தொழில் பொக்கிஷசாலை, விவசாய பொக்கிஷசாலை, நில பொக்கிஷசாலை முதலிய பொக்கிஷசாலைகள் திறக்கப்பட்டு ஜனங்களின் பொருளாதார நிலைமை மேம்பாடடையும்படி செய்யும் இக்காலத்தில் நம்மத்திய பொக்கிஷசாலையைக் கொண்டு ஆங்காங்கு இடங்களின் தேவைக்குத் தக்கவாறு ஏற்படுத்தும் கிளைப் பொக்கிஷசாலைகளை பொருளுதவி செய்யும்படி ஏன் செய்யக்

கூடாது? இப்படிகிளைப்பொக்கிஷசாலைகள் ஏற்படுத்துவது ஆரம்பத்தில் அசாத்தியமாயிருந்தால் பல இடங்கள் உள்ள பெரும் நாடார் வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தோடுகூட இப்பொக்கிஷசாலையின் கூட்டுறவைக் கொண்டு செய்து காட்டுவார்களானல் அதிக பிரயோசனம். இவ்விஷயத்தை ஆலோசித்து சட்டதிட்டங்கள் செய்ய நான் போன வருஷம் என் உபந்யாசத்தில் சொன்ன பொருளபிவிர்த்தி சபை இவ்வேலையைக் கவனிக்கவேண்டும். இவ்விஷயத்தை முடிப்பதற்கு முன் ஒரு காரியம் சொல்ல விரும்புகிறேன். நம் மகா ஜனசங்க உத்தியோகஸ்தர்கள் சங்கவேலை சம்பந்தமாய் செலவழிக்கும் வழியில் அதிகச் சிக்கனமாயில்லை என்று சிலர் எண்ணுவதாய் தெரிகிறது. நம் சங்க உத்தியோகஸ்தர்கள் பெரும்பான்மையோர் சம்பளமில்லாமல் வேலைசெய்து வருகிறார்கள். தங்கள் சௌகரியத்தையும் கஷ்டத்தையும் கவனியாமல் அவர்கள் செய்துவரும் வேலைக்கு நாம் மனமார வந்தனம் செலுத்த வேண்டும். வீண் செலவுகள் நடக்கவுமில்லை. அதற்காக நாம் கவலைப்பட வேண்டியதுமில்லை.

நமக்கு வேண்டிய பொருள் உண்டான காலத்தில் மிகவும் தேர்ச்சியடைந்தவர்களை சம்பளம் கொடுத்து, காரியதரிசிகளாய் ஏற்படுத்தி அவர்களை வேறு வேலைகளைக் கவனியாமல் மரபு சம்பந்தமான வேலைகளை மாத்திரம் கவனிக்கும்படி செய்வது நல்லகாரியம்தான். ஆனல் மகாஜன சங்கத்தின் வரவு செலவு கணக்கைப் பாருங்கள். நாம் அந்த ஸ்திதிக்கு வர எவ்வளவு நாள்பிடிக்கும் என்று நீங்களே யோசியுங்கள். நமது மகாஜன சபையின் கௌரவ காரியதரிசியாயிருந்த பழனியப்ப நாடார் காலம் சென்றதற்காக அதிகத் துயரப்படுகிறேன். அவர் மரணத்தால் நம்மரபுக்கு பெரும் நஷ்டமும் தீராத் துயரமும் ஏற்பட்டிருக்கிறது.

பொது விஷயம்.

நமது தலைவராயிருந்த மகனீய சர். பி. டி. தியாகராஜ செட்டியாரின் மரணத்தால் நம்மரபுக்கு மாத்திரமல்ல, பிராமணரல்லாதார் எல்லோருக்குமே பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பிராமணரல்லாதார்களுக்கு பொது நன்மையிலும், ராஜரீகம் நடத்தும் விஷயத்திலும் உற்சாகத்தை உண்டு பண்ணி அவர்களை சமுதாய முன்னேற்ற விஷயத்திலும், ராஜரீக வாழ்க்கையிலும் வழிகாட்டியாய் இருந்ததற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவருடைய ராஜதந்திரத்தால் நமக்குக் கிடைத்திருக்கும் ராஜாங்க சீர்திருத்தத்தின் நன்மைகளையும், சௌகரியங்களையும் நாம் முழு பிரயோசனப்படுத்துவது அவருக்காகவும், நமக்காகவுஞ் செய்யவேண்டிய கடமையாகும்.

சமுதாய ராஜரீக சுதந்தரங்களை அடைவதற்கு நாம் விழிப்புடன் உழைக்க வேண்டும். சட்ட சபையிலும் நம் எண்ணிக்கைக்குத் தக்கவாறு நம் பிரதிநிதிகள் இல்லாத மற்ற ஸ்தல சுய ஆட்சி சபைகளிலும், சர்க்கார் உத்தியோக வழியிலும், நம் சுதந்தரத்தையும், நம் சாமர்த்தியத்தையும் நிலைநாட்டி தேசமுன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டும். மேலே சொன்ன ஸ்தல சுய ஆட்சி சபைகளுக்கு நம்பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க அங்கங்கே உள்ள நம்மரபினரின் சங்கங்களாவது, இதற்காகப் பிரத்தியேகமாய் நியமிக்கப்படும் சிறு சங்கங்களாவது நம்மரபினருள் தக்க பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து ராஜாங்கத்தாருக்குத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வித பிரசார வேலைக்கு நல்ல உதவியாய் இருப்பது பத்திரிகைகள் தான் என்று வற்புறுத்திச் சொல்லுகிறேன். பத்திரிகைகளின் உதவியைக் கொண்டு நம்மரபின் மேம்பாட்டிற்காகப் பிரயாசைப்பட நம்மவர் அதிகமாய் முன் வருவதாய்த் தெரியவில்லை. நம்மரபின் முன்னேற்றத்திற்காக இப்போது சில வார சமாச்சாரப் பத்திரிகைகள் நல்ல வேலை செய்து வருகின்றன. நம்மவர்கள் இவைகளின் முழு பிரயோஜனத்தை உணர்ந்து தக்க உதவி செய்வதாய்த் தெரியவில்லை. இச்சமாசாரப் பத்திரிகைகளை அபிவிர்த்தி செய்ய வேண்டும். இதன் அபிவிர்த்திக்கு [illegible] அபிமான முக்

நான் அவசியம். நம்மரபினர் தங்கள் கடமைகளை உணர்ந்து நம் சமாச்சாரப் பத்திரிகைகளை அபிமானிக்கத் தீர்மானிப்பார்களானால், ஒரு மேலான தின சமாசாரப் பத்திரிகையை திறமையுடனும் மேன்மையுடனும் நடத்துபவர்கள் நம்மரபினரில் அநேகர் இருக்கிறார்கள். நான் இந்த யோசனையை நம் மகாநாட்டின் கல்வி அபிவிர்த்தி சங்கத்திற்கு சொல்லிக் கொள்ளுகிறேன். இம் மகா நாடே பத்திரிகைகள் விஷயமான காரியங்களை கவனிக்க ஒரு விசேஷ சபை ஏற்படுத்தி ஆங்கிலத்திலும், தாய் பாஷையிலும் பிரசார வேலை செய்வதை அதன் முக்கிய அலுவலாய்நிர்ணயிக்கவேண்டும்.

முடிவுரை.

இம்மகா நாட்டின் உத்தியோகம் வகிப்பவர்கள் கடந்த வருஷம் செய்த மேலான வேலைக்காக நான் இம்மகாநாட்டின் நாமத்தில் அவர்கள் எல்லோருக்கும் வந்தன மளிக்கிறேன். அவர்கள் செய்த சிறந்த வேலைக்கு இம் மகா நாடு கூடியிருப்பதும், அதில் அவர்கள் சமர்ப்பித்த வேலை நடைபடி பத்திரங்களுமே தக்க சாக்ஷி. கடந்த வருஷம் அவர்கள் செய்த இடைவிடா முயற்சியால் பல சிறந்த காரியங்கள் கைகூடியிருக்கின்றன. வரும் வருஷத்தில் இன்னும் அதிகமான வேலையும் மேலான பலனும் உண்டாக வேண்டுமென்று விரும்புகிறேன். நம் ஜாதீய முன்னேற்ற விஷயத்தில் பல திசைகளிலும் உழைக்க ஒவ்வொரு அங்கத்தினர்க்கும் தீர்க்காயுளும், அஷ்ட ஐஸ்வரியங்களும் உண்டாவதாக. நம்மரபின் க்ஷேமலாபத்தின் பொருட்டு நாம் சகலரும், இறைவனோடும் இதிலுள்ள மனிதர்களொவ்வொருவரோடும் ஒத்து உழைப்பதே வருகிற வருஷம் நம் முக்கிய கோரிக்கையாய் இருக்க வேண்டும்.

சீமான்களே, சீமாட்டிகளே, அன்புடனும் பொறுமையுடனும் என் உபந்யாசத்திற்கு செவி கொடுத்திருந்ததற்காக நான் முழு மனதோடு உங்களுக்கு வந்தன மளிக்கிறேன்.

சுபம்! சுபம்! சுபம்!

கௌமார நாடி ஜோதிடசாலை.

1. இது எங்கள் முன்னோர்கள் காலந்தொட்டு பாரம்பரையாய் கையாண்டுவந்த ஓலைப் புத்தகங்கள் சுமார் 3000000 ஜாதகங்களுக்குமட்டும் சுருதிகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் ஜாதகத்திற்குரிய பலன்களை நேரில் பார்த்துக்கொண்டபின் உண்மைகளை யறிந்து அநுபவத்திற் காணலாம்.

2. இதில் கிரகங்களின் இராசிசக்கரம், ஆதியாக வருடம், மாசம், தேதி, நாள், நட்சத்திரம், நாழிகை, விநாடி, ஊர், வீதி, வீடு, வாசல், சூல், ஜாதி, மதம், பெயர், தந்தைவழி, தாய்வழி, தாய்தந்தையர், ஜன்மகாலம், அவர்கள் பெயர், பாட்டன் காலநிலைமை, தகப்பன்கால நிலைமை, தன்காலநிலைமை, தாய்தந்தையர், சகோதரம், ஆண்பெண் மொத்தம் இருப்பு, [illegible] கால நிலைப்பு, தன்னுடைய சகோதரம், ஆண், பெண், மொத்த உதிப்பு, மத்திமகாலத்தில் நிகழக்கூடியவை முடிவுகாலதீர்க்கம், விவாககாலம், மனைவிபெயர், புத்திரபாகம், ஆண்பெண் மரணகாலத் தீர்க்கம், தொழில், கண்டகாலம், தோஷம் தோஷநிவாரணம் முன்பின் ஜென்மம் ஆயுள்வினை அப்போதைக்கப்போது ஆகும் காலபலன்களை திசாபுக்தியாகவோ கோசார ரீதியாகவோ விளக்குவதுடன் இதில் சொல்லாத அனந்த விசேடபலன்களையும் அவரவர் போகபாகத்துக்கு தக்கபடி விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளன. ஜாதகம் ஒன்றுக்கு சார்ஜ் ரூ20-0-0

3. ஒவ்வொரு ஜாதகங்களுக்கும் முதலில் அட்வான்ஸாக ரூபாய் 10 முன்னதாக கட்டவேண்டும். முதற்பாகம் கிடைத்தவுடன் மிச்சம் ரூபாய் பத்தும் கொடுத்தபிறகுதான் மேற்பாகம் கேட்கப்படும். எழுத்துக்கூலி ரூபாய் ஒன்றும் நோட்டுப் புஸ்தகமும் பிரத்தியேகமாக கொடுக்கவேண்டும். மற்ற விபரங்கள் நேரில் தெரியலாம்.

செ. தங்கவேல் நாடார்,

கௌமார ஜோதிடசாலைத் தலைவர், வடிவாய்க்கால்தெரு. மாகாமகக்குளம்; கும்பகோணம்.

சந்தோஷ சமாச்சாரம்.

ஸ்ரீமான், பாலசிங்கம் சத்திய நாடார் M. A; M. L; LL. M. அவர்கள்.

இவர்கள் எமது அப்த சிநேகிதரும், காலஞ்சென்ற ஜோஸேப்பு, சத்திய நாடார், M. A; M. L, அவர்களது அருமைக் குமாரருமாவர். இவர்கள் சென்றவருடம் பாம்பே யுனிவர்சிட்டியில் (Master of Laws of the University of Bambay - March 1924) பாரிஸ்டர் பாஸ் செய்து L. L. M. பட்டமும் பெற்ருர். இவ்வருடம் சென்னை யுனிவர்சிட்டியில் (Master of Laws of the University of Madras - april, 1925) பாரிஸ்டர் பாஸ் செய்து, M. L, பட்டமும் பெற்ருர். இவர் பேருக்குத் தகுந்தாப்போல் இரண்டு வருடமும் சிங்கமென ஜெயித்ருர்.

இவ்வருடம் இச்சென்னையில் இப்பாரிஸ்டர் பரிட்சைக்குச் சென்றவர்கள் 15-பேராகும். அவர்களில் ஆறபேர் பாஸ் செய்தனர்கள். அவ்வாறவருள் நமது க்ஷத்திரிய சிங்கமும் ஒன்ருகும். மற்ற இவர்களும் பிராமணர்களே யாவர்.

இனி இவர்கள் பாரிஸ்டர் பதவியில் நின்று, மங்கா புகழ்பெற்று வாழ, கடவுளைப் பிரார்த்திப்போமாக. சுபம்! (பத்திராதிபர்)

ஸ்ரீ கணேஷ மோட்டார் ஏற்றுமதி ஸர்விஸ்.

இலங்கையில் புதியவசதி.

கொளும்பிலிருந்து இலங்கைநாட்டுப் பகுதிகளுக்கு அரிசி, பசைாக்கு, ஏற்றி யனுப்பவும்; நாட்டுப் பகுதியிலிருந்து கொளும்புக்கு கொப்பரு, தேங்காய், ரப்பர், தேயிலை, கொக்கோ, பாக்கு முதலிய சரக்குகள் ஏற்றிவரவும் வேண்டியநேரம் சகாயமான வாடகைக்கு மோட்டார் லாரிகள் சப்ளை செய்யப்படும். நேரிலும் தபால் மூலமாயும், டெலிபோன் மூலமாயும் ஆர்டரனுப்பலாம்.

விலாசம்:—

கெ. கலியாணசுந்தர நாடார்,

எஸ்டேட் சப்ளையர்.

பார்வர்டிங் & கமிஷன் ஏஜெண்ட்,

டெலிபோன் 983 & 254 } 67 நம்பர், மலிபான் வீதி. கொளும்பு.

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

நமது பத்திரிகை தாமதப்பட்டு வருகிறதென்று, மன ஆயாசங் கொள்ளாதிருக்கக் கோருகின்றேன். சில முக்கிய அசந்தர்ப்பத்தால் அவ்விதம் நேரிட்டது. இனி அவ்விதம் நேராது. சந்தா நேயர்கள் தங்களுக்குரிய சந்தா தொகையை மணியாடரில் அனுப்பவும், புதிய சந்தாதாரையும் சேர்த்தனுப்பவுங் கோருகின்றேன். பணம் அனுப்புகிறவர்கள் அவர்களது முழுவிலாசத்தையும், கூட்டெழுத்தில்லாமல் விபரமாக எழுதி அனுப்பவும், சிலர் பணம் அனுப்பியிருக்கிருர். பெயர் நன்ருய் தெரியவில்லை. அப்படி அனுப்பியவர்கள் தங்கள் விலாசத்தை நன்ருய் எழுதியனுப்பவும்.

க்ஷத்திரிய மித்திரன்,
(பத்திராதிபர்.)